பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆடி 25 வெள்ளிக்கிழமை (10.08.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 254

# கருணா குழுவினரின் ஆயுதங்களை களைய ஐ.நா. அதிகாரி வலியுறுத்து

## வடக்கு, கிழக்கு மக்கள் அச்சத்துடன் வாழ்வதாகத் தெரிவிப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 10

**கருணா அணி போன்ற துணைக்குழுக்களின் ஆயுதங்கள் களையப்படவேண்டும் என்று இலங்கைக்கு விஜயம் செய்த ஐ.நா. உயரதிகாரி ஜோன் ஹோம்ஸ் தெரிவித்திருக்கின்றார்.**

**நான்கு நாள் விஜயமாக இலங்கை வந்திருந்த அவர் நேற்று இங்கிருந்து புறப்பட முன்னர் ஊடகவியலாளர் மாநாட்டிலும், ஊடகங்களுக்குத் தனித்துப் பேட்டியளித்த சமயத்திலும் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.**

ஐ.நாவின் மனிதாபிமான விவகாரங்களுக்கான உயர்நிலை அதிகாரியான ஜோன் ஹோம்ஸ் நேற்று முற்பகல் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொள்ள முன்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சுமார் 15 நிமிட நேரம் - குறுகிய காலம் - கலந்து பேசினார்.

ஊடகவியலாளர் மாநாட்டிலும் அதற்கு முன்னர் ஊடகவியலாளர்களைத் தனித்துச் சந்தித்தபோதும் ஹோம்ஸ் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

மனிதாபிமானப் பணியாளர்களின் பாதுகாப்பு இங்கு கவலைக்குரியதாக உள்ளது. அந்த நோக்கில் பார்த்தால் உலகில் அப்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை நிறைவேறியது

அவசரகாலச் சட்டம் மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது. இவ் விடயம் தொடர்பான பிரேரணை 92 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. பிரேரணைக்கு ஆதரவாக 107 வாக்குகளும் எதிராக 15 வாக்குகளும் கிடைத்தன. கூட்டமைப்பின் கோரிக்கையின் பேரில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. ஐ.தே.க உறுப்பினர்கள் எவரும் சபையில் இருக்கவில்லை

ஆதரவாக ஜே.வி.பி. ஜாதிக ஹெலஉறுமய, இ.தொ.கா. முஸ்லிம் காங்கிரஸ் என்பன அரசுடன் இணைந்து வாக்களித்தன. கூட்டமைப்புடன் இணைந்து மேலக மக்கள் முன்னணி எதிராக வாக்களித்தது.

## இப்போதைக்குக் கருணா குழுவிடமிருந்து ஆயுதக் களைவு இல்லை என்கிறது அரசு

கொழும்பு,ஓக. 10

கருணா குழுவின் ஆயுதங்களை உடனடியாகக் களையும் எண்ணம் அரசுக்கு இல்லை என்று அரசு தெரிவித்திருக்கின்றது.

அமைச்சரவைக் கூட்ட முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அரசின் சார்பில் ஊடகப் பிரதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன இவ்வாறு நேற்றுத் தெரிவித்தார்.

புலிகளினால் உயிர் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள கருணாகுழுவினர் தங்களின் தற்பாதுகாப்புக்கு ஆயுதங்களை வைத்திருப்பது தவிர்க்கமுடியாதது.

1989ஆம் ஆண்டில் வாசுதேவ நாணயக்காரவின் பாதுகாப்புக் கருதிக்கூட அவருக்கு ஒரு பிஸ்டல் கொடுக்கப்பட்டது.

ஜே.வி.பியினர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று இங்கு வரும் வரைக்கும் அவர்களும் தமது பாதுகாப்புக்கு ஆயுதங்களை வைத்திருந்தனர்.

கிழக்கில் தேர்தல் நடந்து, (08 ஆம் பக்கம் பார்க்க)



ஐ.நாவின் மனிதாபிமான விவகார உதவிச் செயலர் ஜோன் ஹோம்ஸ், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேற்றுக்காலை அலரிமாளிகையில் வைத்துச் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம். அருகில் அமைச்சர்களான மஹிந்த சமரசிங்க மற்றும் மிலிந்த மொறகொட.

## சிப்பாய், ஊர்காவலர் வவுனியாவில் பலி

கொழும்பு, ஓக. 10

வவுனியா, மாமயிலங்குளப் பகுதியில் உள்ள படையினரின் முன்னரங்க நிலைகள் மீது நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மோட்டார்த் தாக்குதலில் படைச்சிப்பாய் ஒருவரும், ஊர்காவலர் ஒருவரும் உயிரிழந்துள்ளனர். அத்துடன் மேலும் மூன்று ஊர்காவலர்கள் காயமடைந்துள்ளனர் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

## உயிலங்குளம் பாதையூடாக மட்டுமே மடு யாத்திரிகர்கள் பயணம் செய்யலாம்

### மன்னார் அரச அதிபர் தகவல்

மன்னார், ஓக.10

பிரசித்திபெற்ற மடு மாதா தேவாலய வருடாந்த உற்சவத்தில் கலந்துகொள்ளும் பக்தர்கள் உயிலங்குளம் சோதனை நிலையம் ஊடாக - பாதையூடாக - செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் அரச அதிபர் ஏ.நிக்கலஸ் பிள்ளை இத் தகவலைத் தெரிவித்தார்.

மடு தேவாலய உற்சவம் கடந்த 6ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. எதிர் வரும் 15ஆம் திகதி திருப்பலி, திருச்சொரூப பவனி என்பன இடம்பெறவிருக்கின்றன.

இந்த உற்சவத்தில் பங்குகொள்ளச் செல்லும் பக்தர்களின் போக்குவரத்துத் தொடர்பாக அரச அதிபர் தெரிவித்ததாவது:-

மடு உற்சவத்தில் பங்குகொள்ளும் பக்தர்களின் போக்குவரத்துக்கு இரு பாதைகளைத் திறக்க ஏற்பாடு செய்திருந்தோம். கடந்த 6ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை உயிலங்குளம் பாதை ஊடாகவும் இன்று முதல் 17ஆம் திகதிவரை மடுவீதி ஊடாகவும் போக்குவரத்து இடம்பெறும் என முன்னர் அறிவித்திருந்தோம்.

மடு வீதியில் கடந்த ஒரு வருடமாக, மக்கள் போக்குவரத்துக்குச் சாதகமான பாதுகாப்புச் சார்பான விடயங்கள் இடம்பெறாததாலும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு

(08 ஆம் பக்கம் பார்க்க)

## ஒன்றில் திருமணம் செய்யுங்கள்; அல்லது நாட்டைவிட்டு ஓடுங்கள்!

### திருமலை இளைஞருக்கு இப்படியும் அழுத்தம்!



கொழும்பு, ஓக.10

திருகோணமலையில் தமிழ் இளைஞர்களை உடனடியாகத் திருமணம் செய்யுமாறும், இல்லையேல் நாட்டைவிட்டு ஓடிவிடுமாறும் படையினர் கட்டளையிட்டு வருகின்றனர்.

- இந்தத் தகவலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் நேற்று நாடாளுமன்றத் தில் கூறினார்.

அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

அவசரகாலச் சட்டம் நடைமுறைக்கு வந்ததிலிருந்து தமிழர்கள் கடும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். தமிழர்களின் பிரச்சினையை - உரிமைப் போராட்டத்தை - 'பயங்கரவாதம்' என்று இந்த அரசு சர்வதேச நாடுகளுக்குக் காட்டி வருகின்றது.

புலிகள் ஏன் ஆயுதங்களை ஏந்திப் போராடு கிறார்கள் என்பதை இந்த அரசு இன்னும் விளங்கிக் கொள்ளவில்லை. கிழக்கைப் பிடித்துவிட்டோம் என்று அரசு தம்பட்டம் அடிக்கின்றது. அது போலியான ஆட்டம்.

இலங்கையில் தமிழர்களின் விகிதாசாரத்தைக் குறைக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போய் மீண்டோரின் பட்டியலை வெளியிட முடியுமா?

### அரசுக்கு மனோ கணேசன் சவால்



கொழும்பு, ஓக.10

கொழும்பு மாவட்டத்தில் பெரும்பான்மையாக தமிழர்கள் இருக்கின்றபோதும் இங்குள்ள பொலிஸ் நிலையங்களில் சென்று தமிழில் முறைப்பாடு ஒன்றை செய்ய முடியவில்லை. மொழிகளுக்கு உரிய இடம் வழங்கப்படாததனாலேயே இன்று பிரிவினைக்கு அடித்தளம் இடப்பட்டது என்று மேலக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் கூறினார்.

காணாமல் போனவர்கள் தொடர்பாக ஜனாதிபதி செயலகம் பொய்யான தகவல்களை வெளியிட்டுள்ளது.

காணாமற்போனவர்கள் என்று கூறப்பட்டோரில் 90 வீதமானவர்கள் வீடுதிரும்பி விட்டனர் என்று கூறுகின்றீர்கள். காணாமற்போனவர்களின் உறவினர்களால் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள்செய்யப்பட்டுள்ளன. முறைப்பாட்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## 'சுடர் ஒளி' ஆசிரியரின் தகவல் தவறானது என்கிறது அரசு

கொழும்பு, ஓக. 10

"மனித உரிமைகள் அவதானிப்பு மையம் தனது அறிக்கையில், 'சுடர் ஒளி' ஆசிரியர் "தம்மை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏசினார் என்று குறிப்பிட்டார் எனத் தெரிவித்துள்ளது. அப்படிக் கூறுவது முற்றிலும் தவறானது."

- இவ்வாறு அரசின் சார்பில் அதன் பேச்சாளரும் ஊடக அமைச்சருமான அநுர பிரியதர்ஷன யாப்பா கூறினார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் நேற்று இவ்வாறு தெரிவித்தார்.

மனித உரிமைகள் அவதானிப்பு மையத்தின் அறிக்கை முற்றிலும் பக்கச் சார்பானது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# குடாநாட்டில் நடக்கும் சம்பவங்களைத் தடுக்க மக்கள் மனந்திறந்து பேச முன்வர வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஓக.10

சுதந்திரமாகப் பேசவும், நடமாடவும், வாழவும் வேண்டும் என்பதே எனதும் பொது மக்களினதும் கனவுகளாக இருக்கின்றன. அந்தக் கனவுகளை நனவாக்கிக் கொள்ள அனைவரும் மௌனத்தைக் கலைத்து மனம் திறந்துபேச முன்வரவேண்டும்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சு நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று தங்களது பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் யாழ். அமைச்சு அலுவலகத்தில் ஒன்று திரண்டிருந்த பொதுமக்களின் முன்பாக கருத்துக் கூறும்போது அமைச்சர் கூறியதாவது:

வீதிக்குப் போனால் திரும்பி வருவோமோ என்ற ஏக்கமே உங்களது விழிகளில் தெரிகிறது. விடிந்தால் யார், யார் வீடுகளில் அழுகுரல்கள் கேட்கிறதோ தெரியாது என்ற நிலை இன்று நிலவி வருகிறது. அச்சம், மரணம், அவலம், பசி, பட்டினி இந்த அவலங்கள் மட்டும்தான் உங்களது வாழ்க்கையில் தொடர்கதையாக நடந்து கொண்டிருக்கின்றன.

வாழ்க்கையை தொலைத்துவிட்டு இன்று நீங்கள் இங்கே வந்திருக்கிறீர்கள். காணாமல் போனவர்கள் எங்கே? கடத்தப்பட்டவர்கள் எங்கே? என்று நீங்கள் எம்மிடம் முறைப்பாடு செய்து வருகிறீர்கள். கதறி அழுது புலம்புகிறீர்கள். உங்களது உணர்வுகளை நான் நன்கறிவேன். இவ்வாறான சம்பவங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும். அதற்கு மக்களாகிய நீங்கள் மனந்திறந்து பேச அதிகளவில் முன் வர வேண்டும்.

### முக்கிய கடமை

யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரையில் இன்று உணவுப் பொருள்களை பொது மக்கள் அனைவருக்கும் கொள்வனவு செய்துகொள்ள இயலாத நிலையொன்று தலைதூக்கி உள்ளதாகவும் இந்த நிலையை கூடிய விரைவில் மாற்றியமைத்து குடாநாட்டில் அனைத்து மக்களுக்கும் அத்தியாவசிய உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்து கொள்ளக்கூடிய நிலைமையை உருவாக்குவதே இன்றைய முக்கியக் கடமையாக இருக்கிறது.

வருமானமின்றியும் வருமானம் குறைந்தும் வாழ்ந்து வருகின்ற மக்களுக்கு தற்போதைய விலைகளின் பெறுமதிக்கேற்பவும் தேவைக்கேற்பவும் நிவாரணப் பொருள்களைவழங்கநடவடிக்கைகளைமேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார் - என்று அந்த செய்திக்குறிப்பில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. (அ-1)


## கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனையில் கிராம அலுவலராகக் கடமையாற்றும்
ஆ. சூரியகுமார் அவர்களின் அன்புத் தந்தை
**வி. ஆழ்வாப்பிள்ளை** அவர்கள்
காலமான செய்திகேட்டுத் துயரடைகின்றோம்.
அன்னாரின் பிரிவால் துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*உதவி அரசாங்க அதிபரும், உத்தியோகத்தர்களும்,*
*உதவி அரசாங்க அதிபர் பணிமனை,*
*குடத்தனை, மருதங்கேணி.*

## இதய அஞ்சலி



**சந்தாம்பிள்ளை சகாயசீலன்**
(சிரேஷ்ட விரிவுரையாளர்,
அரசறிவியல்த்துறை, யாழ் பல்கலைக்கழகம்)

*இருதயம் ஒருகனம் அதிரவே*
*உமது மூச்சு நின்றது*
*ஒருவரும் நிரப்பிட முடியா*
*வெற்றிடம்*
*எவ்விதம் மீள் நிரப்பிவிடும்.*

என்றும் நினைவுகளுடன்:
மாணவன்: N.தாசன்.
(63483)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி சபாரட்ணம் பாக்கியம்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சபாரட்ணம் பாக்கியம் நேற்று (09.08.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - முத்துப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற சபாரட்ணத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மானிப்பாய் வி. எஸ். கந்தையா, வி. எஸ். கணபதிப்பிள்ளை மற்றும் வி. எஸ். மருதலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சறோஜினிதேவி, திருவாஞ்சீஸ்வரன் (வி. எஸ். கே), சந்திராதேவி, இந்திராதேவி, நகுலேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற பரராஜசிங்கம் மற்றும் பாலரோகினி, க. கந்தசாமி (சாமியார், இணுவில்), M.P.W. வின்ரன், சுகர்தினி (ஜேர்மனி) ஆகியோரின் மாமியும் நிர்மலன் (ஜேர்மனி), மைதிலி (கனடா), கிரிசு, மோகனராஜ் (ராஜ்), திலகவதி, கிருபன் (P.H.I), சொரூபன், Dr. யேக்கப்சன், சோபிதாஸ், ஆகாஸ் ஆகியோரின் பேர்த்தியும் யாதவன், யதுசன், ஆறோன், டக்சன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (10.08.2007) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

*லோட்டன் றோட்,*
*மானிப்பாய்.* (63488)

### திருமதி சுப்பிரமணியம் தங்கம்மா

கரணவாய் தெற்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் தங்கம்மா நேற்று (09.08.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சுப்பிரமணியத்தின் (கீதா பேக்கரி) அன்பு மனைவியும் இ. மஞ்சுளா, சி. சியாமளா, ந. மாலா, காலஞ்சென்ற பிறேம்குமார், தி. சிறிஜெயந்தி, உ. சகிலா, காலஞ்சென்ற உதயகுமார் ஆகியோரின் அன்புத் தாயும் வ. இராதாகிருஷ்ணன் (பிரதிக் கல்விப் பணிப்பாளர் - தீவகம்), காலஞ்சென்ற சிவபாதலிங்கம், நாகேஸ்வரன், திலகநாதன் (திருமலை), உதயகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2007) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் பூவரசம்பிட்டி மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ. இராதாகிருஷ்ணன் (மருமகன்).


# கோப்பாய் சாயி நிலையத்தினர் மாணவர்களுக்கு உதவி

கோப்பாய், ஓக. 10

கோப்பாய் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தினர் வறிய மாணவர்களுக்கு பாடசாலை உபரணங்களை அன்பளிப்பாக வழங்கினர்.

கோப்பாய் தெற்கு றோ.க.த.க. பாடசாலை, வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தயாலயம் ஆகியவற்றைச் சேர்ந் 300 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், சீருடைத் துணிகள், காலணிகள் என்பவற்றை வழங்கியுள்ளனர். (202-72)

# திருமறைக் கலாமன்றத்தின் தமிழ் விழா அடுத்த வாரம்

யாழ்ப்பாணம், ஓக. 10

திருமறைக் கலாமன்றதின் ஏற்பாட்டில் எதிர்வரும் 19ஆம், 20ஆம் திகதிகளில் தமிழ் விழா யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இருநாள்களிலும் காலையிலும், மாலையிலும் இடம்பெறவுள்ள தமிழ் விழாவில் காலை 8.45 மணி முதல் பிற்பகல் 1.15 மணி வரை கலை, இலக்கியக் கருத்தரங்குகளும், மாலை 3 மணி முதல் மாலை 5.30 மணிவரை கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

கலை இலக்கிய கருத்தரங்குகள் விமர்சனம், பத்தி எழுத்துக்கள், சிறுகதை, கவிதை, புலம்பெயர் இலக்கியம், நாவல், நாடகம், பின் நவீனத்துவம் ஆகிய தலைப்புக்களில் இடம்பெறும். கலை நிகழ்ச்சிகளில் நடனங்கள், நாடகங்கள், இசைக்கச்சேரி, இசை நிகழ்ச்சி எனபனவும் இடம்பெறவுள்ளன.

திருமுறைக் கலாமன்றம் தனது கலைச் செயற்பாடுகளை மேலும் விரிவாக்கம் செய்யும் முகமாக புதிதாக நிர்மாணித்து எதிர்வரும் 15ஆம் திகதி யாழ். நகரில் திறந்து வைக்கவுள்ள கலைத்தூது கலையகத்திலேயே தமிழ் விழா இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (50)


## மணமக்கள் தேவை

[illegible] 021 226 4311.

## இலங்கை மின்சார சபை - யாழ். பிரதேச அலுவலகம்
### மின்தடை பற்றிய அறிவித்தல்

11.08.2007 சனிக்கிழமை மு.ப. 9 மணிமுதல் பி.ப. 2 மணி வரை யாழ். குடாநாடு முழுவதும் அவசர திருத்த வேலை காரணமாக மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின் பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றோம்.

பிரதேச மின் பொறியியலாளர்,
யாழ். பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
சுன்னாகம். (சி-53205)

## வங்கியியல் கற்கை நெறிகள்

**CBF, ACBF, DBF**

**கருத்தரங்கு**

கற்கை நெறி தொடர்பான பதிவு செய்தல் மற்றும்
மீள்கட்டமைப்பு பற்றிய கருத்தரங்கு
வழங்குபவர் - R. வில்லவராஜா
இயக்குநர் கற்கைகள் பிரிவு (Director Studies IBSL)
காலம் - 11.08.2007
நேரம் - காலை 8.00- 9.00
இடம் - யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு மண்டபம்.
IBSL இல் பதிவு செய்த அனைத்து மாணவர்களையும் மற்றும் வங்கி ஊழியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**இயக்குநர்**

**Jaffna College Undergraduate Dept.**
**464, Hospital Rd, Jaffna.** (சி-53203)

## STUDY ABROAD
## (UK, CANADA, USA & ETC)

More than 10 Countries
More than 1000 Universities
More than 10,000 Courses

Course Structure - 01
G.C.E. (O/L) 5 Subjects - C grade
⇩
Bachelor of Business Administration
(2 Years)
⇩
Master of Business Administration
(1 Year)

**E First Group**
**Behind Potpathy Pillayar Temple,**
**Potpathy Road, Kokuvil East, 021 222 6436.**

## 41ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 - 07 - 1928 | 29 - 06 - 2007 |



**அமரர் சுப்பிரமணியம் துரைராஜா**

**நாள்கள் 41 சென்றாலும்**
**உங்கள் அன்பு முகம் மறையவில்லை**
**அப்பா அன்போடு எம்மைத் தூக்கி**
**நெஞ்சினிலே சுமந்த அப்பாவே**
**ஆறாத் துயரில் எம்மை விட்டு**
**ஆண்டவன் அடியில் சேர்ந்தீரே அப்பா**

அன்னாரின் இறுதிக்கிரியைகளின் போது வருகை தந்தோருக்கும் எமது துயரில் பங்குகொண்டு சகல உதவிகளையும் வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (10.08.2007) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்).*

*கோகுல வீதி,*
*கோண்டாவில் வடக்கு,*
*கோண்டாவில்.* (63485)

**குடும்பத்தினர்**
**(மதனகுமார்).**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் திருவிழா கால ஏற்பாடுகள் குறித்த கலந்துரையாடல்

நல்லூர்,ஒக.10

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த திருவிழா கால ஏற்பாடுகள் செய்தல் தொடர்பான தீர்மானங்கள் மேற்கொள்வது பற்றிய கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

ஆணையாளர் மு.செ.சரவணபவ தலைமையில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் இலங்கை மின்சார சபை, வட பிராந்திய போக்குவரத்துச் சபை, தொண்டர் நிறுவனங்கள், தனியார் பஸ் சேவை சங்கம், சிற்றூர்தி போக்குவரத்துச் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் மற்றும் ஆலய அறங்காவலர் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203-111)

# 7ஆயிரம் ஹெக்டேயரில் காலபோக நெற்செய்கை; முதற்கட்டமாக 1,200 மெற்றிக்தொன் மானிய உரம்

## கமநலசேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஒக். 10

யாழ். மாவட்டத்தில் இவ்வாண்டு சுமார் 7ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும், அதற்குத் தேவையான மானிய உரத்தைக் கப்பல் மூலம் எடுத்துவருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் எம்.பற்றிக் டிறஞ்சன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கமநல சேவைகள் திணைக்களம் அண்மையில் மேற்கொண்ட கணக்கெடுப்பின்படி இவ்வாண்டு 7ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் நெல் பயிரிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கு 2ஆயிரத்து450 மெற்றிக் தொன் மானிய உரம் தேவைப்படுகின்றது. இதில் முதற்கட்டமாக ஆயிரத்து 200 மெற்றிக் தொன் மானிய உரம் கப்பல் மூலம் எடுத்துவரப்படவுள்ளது.

கப்பலில் இடவசதி கிடைக்காமையாலேயே உரம் எடுத்துவரும் நடவடிக்கை தாமதமடைந்துள்ளது. ஆயினும் அதனை விரைவாக எடுத்துவருவதற்கான முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எடுத்துவரப்படும் மானிய உரம் காலபோக நெற்செய்கையில் இம்முறை ஈடுபடும் விவசாயிகளுக்கு மட்டும் உரிய முறையில் பகிர்ந்தளிக்கப்படும் - என்றார் உதவி ஆணையாளர்.

மீதி மானிய உரமும் விரைவில் கப்பலில் எடுத்துவரப்பட்டுப் பகிர்ந்தளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (50)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

### திருட்டுக்களைக் கட்டுப்படுத்த விழிப்புக் குழுக்கள் அமைப்பு

கொக்குவில்,ஒக.10

திருட்டுக்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் 513 ஆவது இராணுவப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் விழிப்புக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

இவ்விடயம் தொடர்பான கூட்டம் ஒன்று அண்மையில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

இராணுவத்தினரின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இக்கூட்டத்தில் இராணுவ அதிகாரிகள், கிராம சேவையாளர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குழுக்கள் அமைப்பது தொடர்பாகக் கிராம சேவையாளர் பிரிவு ரீதியாகவும் பொது மக்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (202-69)




சாரணர்கள் அணிவகுப்பில் ஈடுபடுவதை முதலாவது படத்திலும் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள் : சுந்தா)

## நான்கு பிரிவுகளைச் சேர்ந்த சாரணர்கள் இணைந்து வடமராட்சியில் சிரமதானம்

உடுப்பிட்டி,ஒக.10

சாரணர் நூற்றாண்டு தினத்தை முன்னிட்டு நான்கு பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த சாரணர்கள் ஒன்றிணைந்து கடந்த முதலாம் திகதி வடமராட்சியில் சிரமதானப் பணியை மேற்கொண்டனர்.

பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி, கோப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த சாரணர்கள் இணைந்து பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலை, பருத்தித்துறை பஸ் நிலையம் ஆகிய இடங்களில் சிரமதானப் பணி செய்தனர்.

மாவட்ட ஆணையாளர் ஆ.ஜெகநாதன், உதவி ஆணையாளர் மு.ரவீந்திரன், சாரண ஆசிரியர்கள் ஆகியோரின் வழிகாட்டலில் இந்தச் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது. (202-155)

## வடமராட்சி பிரதேச மக்களின் நலன் கருதிய திட்டங்கள் லயன்ஸ் கழகத்தால் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம்,ஒக.10

பிரதேச மக்கள், மாணவர்களின் நலன் கருதி பல்வேறு செயற்றிட்டங்களை வடமராட்சி லயன்ஸ் கழகம் மேற்கொண்டு வருகின்றது.

இது தொடர்பாக கழகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

கடந்த மாதம் கழகம் பல்வேறு நலத் திட்டங்களை மேற்கொண்டது.

5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு வழிகாட்டல் வகுப்புகளும் மாதிரிப்பரீட்சையும் நடத்தப்பட்டன. இதில் வடமராட்சியின் 37 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பங்குபற்றினர்.

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் நிதியுதவியுடன் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 200 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

லயன்ஸ் கழகம் 306 பி 1 மாவட்டத்தின் நிதியுதவியுடன் தலா எட்டரை லட்சம் ரூபா செலவில் 6 வீடுகள் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கென அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

வடமராட்சி, கெருடாவில், தொண்டைமானாறு, கொம்மாந்துறை ஆகிய பகுதிகளில் சட்டரீதியாகத் திருமணப் பதிவுகளை மேற்கொள்ளாத 53 தம்பதிகளுக்கு பதிவுகள் இலவசமாக மேற்கொள்ளப்பட்டன.

உள்ளுராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்குட்பட்ட நூலகங்களுக்கென ஒரு தொகுதி நூல்கள் வழங்கப்பட்டன.

கழகத் தகவல்கள் அடங்கிய என்னும் இணையத்தளம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது -என்றுள்ளது. (202)

## போதிய வசதிகளின்றி இயங்கும் திருநெல்வேலிப் பொதுச் சந்தை

### வரியிறுப்பாளர் சங்கம் சுட்டிக்காட்டுகிறது

யாழ்ப்பாணம்,ஒக்.10

திருநெல்வேலி, பொதுச்சந்தை போதிய வசதிகளின்றியும் சுகாதாரக் குறைபாட்டுடனும் இயங்குகின்றது. இதனால் வியாபாரிகளும் நுகர்வோரும் சிரமப்படுகின்றனர்.

அண்மையில் நல்லூர் பிரதேச சபை அபிவிருத்தி வேலைகள் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது. அக்கலந்துரையாடலிலே மேற்படி விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. எனினும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என நல்லூர் பிரதேச வரியிறுப்பாளர் சங்கம் பிரதேச செயலாளருக்குச் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பாக சங்கம் பிரதேச செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

திருநெல்வேலி சந்தை, நல்லூர் பிர தேச சபையால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. இச்சந்தையில் -

* போதிய நீர் வசதி இன்மை.
* உரிய முறையில் மலசல கூடம் அமைக்கப்படவில்லை.
* கழிவுப் பொருள்கள் சேகரிக்க தாங்கிகள் இல்லை.
* அனுமதியற்று வீதியோர வியாபார நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
* சந்தையைச் சூழ திட்டமிடப்படாத சீரற்ற வடிகால் அமைப்பு உள்ளது.
* தூர நோக்கற்ற சந்தை அமைப்புத் திட்டம்.

ஆகிய குறைபாடுகள் காணப்படுகின்றன.

இவற்றை நிவர்த்தி செய்ய உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றுள்ளது. (202)

## வடமராட்சியில் அரிசி, சீனி, தட்டுப்பாடு

கரவெட்டி,ஒக.10

வடமராட்சியில் அரிசி, சீனி, போன்றவற்றிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

வடமராட்சியில் பலநோக்குக் கூட்டுறவுக் கடைகள், தனியார் கடைகள் போன்ற இடங்களில் அரிசி, சீனி, போன்றவற்றிற்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

எனினும் சில தனியார் கடைகளில் மேற்படி பொருள்கள் அதிக விலையில் கிடைக்கின்றன. இதன் காரணமாக வறிய குடும்பங்கள் பெரிதும்பாதிக்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.(203-70)

## ஊடகவியலாளர் விருது விளக்கக் கருத்தரங்கு

நல்லூர்,ஒக.10

பிராந்திய ஊடகவியலாளர்களுக்கான விருது வழங்குதல் தொடர்பான விளக்கக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஜும்ஆ பள்ளி வாசல் வீதியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு ஊடகவியலளர்கள் கேட்கப்படுகிறார்கள். (1-111)

## யாழ்.மாவட்ட கல்வி நிலை தொடர்பாக சமூக சேவைகள் அமைச்சர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக.10

யாழ்.மாவட்ட கல்வி நிலை நடவடிக்கைகளின் அபிவிருத்தி தொடர்பாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் யாழ்.,கிளிநொச்சி மாவட்டங்களுக்கான அபிவிருத்திக் குழுத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா யாழ்.மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்களுடன் கலந்துரையாடியுள்ளார் என்று அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குடாநாட்டில் இன்றைய கல்வி நடவடிக்கைகள் பல்வேறு சிரமங்களுக்கும் இடையூறுகளுக்கும் மத்தியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சிறார்கள் பல்வேறு காரணங்களால் பாடசாலை செல்வதில்லை. பலர் தங்களது கல்வி நடவடிக்கைகளை இடைநிறுத்தி உள்ளனர். ஒரு சில அதிகாரிகள் அசமந்தப் போக்கில் நடந்து கொள்கின்றனார்கள். பல்வேறு தரப்பினரால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு மேற்கண்ட முறைப்பாடுகள் கிடைத்ததை அடுத்தே மேற்படி சந்திப்பு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கலந்துரையாடலின்போது பாடசாலை செல்லாத சிறுவர்கள் மற்றும் தங்களது கல்வி நடவடிக்கைகளை இடைநடுவில் நிறுத்திய மாணவர்கள் தொடர்பில் கணக்கெடுப்பொன்றை நடத்துவது என்றும் அதன் பின்னர் இச்சிறுவர்களை கல்வியின்பால் ஈர்ப்பதற்கான ஊக்குவிப்பு வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் குடாநாட்டில் நிலவுகின்ற ஆங்கில ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டது. பட்டதாரி ஆசிரியர்களுக்குத் தென்பகுதியில் பயிற்சியளித்து அவர்களை ஆங்கில ஆசிரியர்களாக நியமனம் செய்வதென்றும், தொண்டர் ஆசிரியர்களில் ஆங்கில பாடத்தில் திறமைச்சித்தி பெற்றிருப்பவர்களுக்கு ஆங்கிலப் பயிற்சியளித்து அவர் களை ஆங்கிலப் பாடத்தினைப் போதிக்க நியமனம் செய்ய இயலும் என்றும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

குடாநாட்டின் கல்வி அபிவிருத்திப் பணிகளில் அமைச்சுக்களினதும் உதவிகளைக் கொண்டு பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொள்ள முடியும். இதற்கான உரிய வேலைத் திட்டங்களை தயார் செய்வது உடனடியாகத் தன்னிடம் சமர்ப்பிக்கும்படியும் வலயக் கல்விப் பணிப்பாளர்களிடம் அமைச்சர் கேட்டுக்கொண்டார். (203)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக.10

சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆடி அமாவாசை நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

அன்று காலை விசேட வழிபாடுகள் நடத்தப்படும். பிற்பகல் 2 மணிக்கு செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறும்.

இதில் அளவெட்டி அருணோதைய கல்லூரி மாணவர்களின் மாருதப்புரவீக வல்லி நாடகமும் மல்லாகம் ம.வி. மாணவர்களின் சத்தியவான் சாவித்திரி நாட்டுக் கூத்தும் இடம்பெறும். (203)

* * *

சுவாமி இராமகிருஷ்ணரின் ஜெயந்தி விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு தாவடி கொக்குவிலில் உள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண சமித்தி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (203)

* * *

பகிரங்க சேவை ஓய்வூதியர்கள் நம்பிக்கை நிதி யாழ்ப்பாண பிரதேச சங்கத்தின் பொதுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ்.பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது. (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலி.கிழக்குத் தோட்டங்களில் மரவள்ளிக்கிழங்கு திருட்டு

### விவசாயிகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஒக.10

வலி.கிழக்குப் பிரதேச தோட்டங்களில் மரவள்ளிக் கிழங்குகள் திருட்டுப் போகும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன.

கோப்பாய், நீர்வேலி, மாசிவன், ஆவரங்கால் போன்ற பிரதேச தோட்டங்களில் பயிரிடப்பட்டிருக்கும் மரவள்ளிக் கிழங்குகளே திருடப்படுகின்றன.

பகல் வேளைகளிலேயே இத் திருட்டுச் சம்பவங்கள் இடம் பெறுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

(202-224)

## 22ஆம் ஆண்டு நினைவலைகள்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 10 | 10 |
| 02 | 08 |
| 1956 | 1985 |



### திருமதி கமலாதேவி சுப்பிரமணியம்

(ஆசிரியை, றோ.க.பாடசாலை, கோப்பாய் தெற்கு)

ஒவ்வொரு கணமும் உங்கள் நினைவுமாய்
இருபத்தியிரண்டு ஆண்டுகள் உருண்டதம்மா
எங்களின் துயரம் ஆற்ற யாருமில்லை
இதயம் உருகிட அஞ்சலி செய்கின்றோம்.

கிறிஸ்தவக்கல்லூரி முன்பு, கோப்பாய் மத்தி, கோப்பாய்.

பிரிவால் துயருறும்:
சுப்பிரமணியம் (கணவர்),
சுதர்ஸன் (மகன்). (63477)

## அவரை இனம் புத்தூரில் அறிமுகம்

எதிர்வரும் சிறு போகத்தில் புத்தூர் கிழக்குப் பிரதே சத்தில் அவரை இன உற்பத்தித் திட்டம் அறிமுகப்படுத்தப் படவுள்ளது.

புத்தூர் கமநல சேவைகள் நிலையத்தைச் சேர்ந்த விவசாயப் போதனாசிரியர் எஸ். பாலகிருஷ்ணன் இத்தகவலைத் தெரிவித்தார்.

இத் திட்டத்திற்கென பிரதேசத்தின் 4விவசாயிகள்தெரிவு செய்யப்பட்டு தலா கால் ஏக்கருக்கான அவரை விதைகள் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை- அச்செழுக் கிராமத்தில் 4விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு கௌபி விதைகள் வழங்கப் படவுள்ளன.

(202- 160)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

### அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
**ஆழ்வாப்பிள்ளை சண்முகம்**

(ஓய்வுபெற்ற லிகிதர், சாவகச்சேரி - யாழ்.இந்துக்கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, யாழ்.கல்வித்திணைக்களம்)

மலர்வு
02 ✱ 12 ✱ 1938

உதிர்வு
09 ✱ 07 ✱ 2007

அன்னாரின் அந்தியேட்டி இன்று (10.08.2007) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிச்சடங்கில் பங்கு கொண்டவருக்கும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் பலவழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளைத்தெரிவித்துக்கொள்கின்றோம்.

33/1, கைலாசபிள்ளையார் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே.0777110222. (63480)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## கேள்வி அறிவித்தல்

### பிரதேச செயலகம், வலி.தெற்கு, உடுவில்

1. G.T.Z வீட்டுத்திட்டத்திற்கு கீழ்க்காணும் பொருள்களை வழங்குவதற்கான கேள்விகள் வலி.தெற்கு பிரதேச செயலரினால் 2007.08.22 ஆம் திகதி காலை 10மணிவரைஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் பிரதேச செயலகத்தில் அன்று நண்பகல் 12 மணிக்குத் திறக்கப்படும்.
2. கேள்விகளை சமர்ப்பிக்கும் போது கேள்விப்பத்திரங்களுடன் பெறுமதி சேர் வரி (VAT) பதிவுச்சான்றிதழ் புகைப்படப்பிரதியை சமர்ப்பிக்க வேண்டும். (VAT) பதிவு இல்லாதவிடத்து பதிவு செய்யப்படவில்லை என்பதற்கான கடிதம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இல்லையேல் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
3. தகுதியுடையோர் உரிய கேள்வி வைப்புப்பணத்தை பிரதேசசெயலகத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டை பெற்று, கேள்விப்பத்திரங்களை 2007.08.20 ஆம் திகதியன்று பி.ப.3 மணி வரை பிரதேச செயலகத் திட்டமிடல் கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.

| பொருள்களின் விபரம் | வேண்டப்படும் தொகை (கியூப்) | கேள்விக்கான பத். பணம் | கேள்விக்காப்பீடு பணம் |
|---|---|---|---|
| மணல் | 104 | 425/= | 8500/= |
| 3/4" சல்லி | 52 | | |
| கண்டகல் | 42 | | |
| 4" கண்டகல் | 06 | | |

கேள்வி தொடர்பான மேலதிக விவரங்களை பிரதேச செயலகத்தில் வேலை நாள்களில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதேச செயலகம், வலி.தெற்கு, உடுவில்.

செல்வி த.மஞ்சுளாதேவி,
பிரதேச செயலர்,
வலி.தெற்கு, உடுவில்.

(கி.53197)

## வாசகர் திருமுகம்

### உப்புக்கு ஏன் இந்த விலை?

சில வாரங்களுக் குமுன் 30 தொன் உப்பு கப்பலில் இருந்து இறக்கப்பட்டது என்பதை 'உதயன்' பத்திரிகையில் வாசித்தேன். எங்கே அந்த உப்பு? சங்கக் கடைகளில் உப்பு இல்லை. 'அயடீன்' சேர்க்கப்படாத உப்பு விற்பனையை சுகாதார உத்தி யோகத்தர்கள் தடை செய்கிறார்கள். கொழும்பில் அயடீன் கலந்த உப்பு ஒரு கிலோ 22 ரூபா. குடாநாட்டில் ஏன் இப்படி உப்புக்கு விலை ஏறி உள்ளது? ஒரு கிலோ 65 அல்லது 70 ரூபாவிற்கு விற்கிறார்கள். என்னதான் பொருள்கள் தாராளமாகக் கிடைத்தாலும் உப்பு இல்லாவிட்டால் எல்லாமே சப்பென்று ஆகிவிடுமல்லவா? உப்புக்கு ஏன் இந்த நிலை என்று யாரும் விளக்கம் தருவார்களா?

சுதுமலை. - கா.பூபாலபிள்ளை.

### ஒரு செயலகத்தின் செயற்பாடு

வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால் பொதுச்சேவை - 2007 பதவிக்கு கோரப்பட்டிருந்த விண்ணப்பப் படிவத்தில் கேட்டுக்கொள்ளப் பட்டதன்படி 250 ரூபாவை பிரதேச செயலகத்தில் வழங்கி அதற்கான பற்றுச் சீட்டைப் பெறுவதற்கு பிரதேச செயலகம் ஒன்றிற்குச் சென்றிருந்தேன்.

அங்கு குறித்த பகுதியில் கடமையில் இருந்த பெண்மணி நீங்கள் வடலியடைப்பு ஆகையால் இங்கு இதற்கான பற்றுச்சீட்டைப் பெறமுடியாது என்று தெரிவித்து சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குச் செல்லுமாறு கூறினார்.

தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக இளம்பிள்ளைகளைக் கண்டபடி வெளியே அனுப்புவது என்பது பிரச்சினைக்குரிய விடயமே.

இந்நிலையிலேயே, எனது மகன் இதற்கான பற்றுச்சீட்டைப் பெறுவதற்கான பணத்தை என்னிடம் தந்திருந்தார்.

விண்ணப்பப் படிவத்தில், யாழ்.மாவட்டத்தில் உள்ள எந்தப் பிரதேச செயலகத்திலாவது பணம் செலுத்திப் பற்றுச்சீட்டு பெறலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என் றும் - இதேநேரம் நான் ஒரு நோயாளியாக இருப்பதனால் என்னால் அதிக தூரம் செல்லமுடியாது இங்கேயே இதற்கான பற்றுச்சீட்டைத் தருமாறும் அப் பெண்மணியிடம் கேட்டுக்கொண்டேன்.

எம்மிடம் இதற்கான பற்றுச்சீட்டு குறைவாகவே உள்ளது; இம்முறை மட்டும் தருகின்றேன்; இனிமேல் இங்கே வரக்கூடாது என்று கூறிப் பற்றுச்சீட்டை வழங்கினார்.

பற்றுச்சீட்டு குறைவாக இருந்தால் அதனை குறித்த பகுதியில் இருந்து முன்னதாக பெற்று வைத்திருப்பது அவர்களின் கடமை. அதனை விடுத்து பொது மக்களை அசௌகரியப்படுத்துவது நியாயமாகுமா?

பற்றுச்சீட்டை வைத்துக்கொண்டு அது குறைவாகவே உள்ளது என்று கூறுவதன் நோக்கம் என்ன?

சம்பந்தப்பட்டவர்களுக்கே இது சமர்ப்பணம்.

வடலியடைப்பு. - கே.எஸ்.நாதன்.

## கருத்தாடல் அரங்கு

யாழ்ப்பாணம், ஒக.10

சுன்னாகம் 'சால்ட் சொசைற்றி' நடத்தி வரும் வாராந்த நிகழ்வில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நிறுவன மண்டபத்தில் கருத்தாடல் அரங்கு நடைபெறும்.

ஆசிரியர் ஜேக்கபூர் 'அமெரிக்கா எழுகிறதா? வீழ்கிறதா?' என்ற தலைப்பில் கருத்தாடல் அரங்கை நடத்துவார். (202)

## சண்டிலிப்பாய் மத்தி முதியோர் சங்கத்திற்கு இரண்டாவது இடம்

யாழ்ப்பாணம், ஒக.10

சண்டிலிப்பாய் மத்தி முதியோர் சங்கம் வடமாகாணத்தின் சிறந்த முதியோர் சங்கங்களில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட சங்கங்களுக்கான பரிசளிப்புவிழா எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம் திகதி குருணாகலில் நடைபெறவுள்ளது.

இதேவேளை-

இச்சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது. தலைவராக க.தம்பாப்பிள்ளையும், செயலாளராக நா. குகதாசனும், பொருளாளராக வா.கிருஷ்ணனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (202)


**THE ROYAL COLLEGE OF JAFFNA**

கலைமாணி முறையில் 3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகவும், 6 மாதங்களில் இலக்கண முறைப்படியும் கதைக்க கற்பிக்க By. விக்னேஸ்வரன் ஆசிரியர், 426 (302) K.K.S. வீதி, யாழ்ப்பாணம். சிவான் வீதி, சங்கானை. (63484)



**பொருளியற்கல்லூரி**

**கணக்கீடு**
**A/L 2008**
**பங்குடமை**

| | | |
|---|---|---|
| யாழ். | செவ்வாய் | 8.00 |
| இணுவில் | சனி | 12.00 |
| பாதி | திங்கள் | 6.15 |

By B.பாலநாதன் B.B.A (HONS) (63481)


## மரண அறிவித்தல்கள்

### வீரசிங்கம் சொர்ணம்



உரும்பிராய் மேற்கு, அன்னங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் சொர்ணம் 06.08.2007 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நாகமணி- முத்தி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தவசி வீரசிங்கத்தின் அன்பு மனைவியும் சிறிநந்தினி (லண் டன்), யோகராஜன் (சுவிஸ்), விஜயராஜா (சுவிஸ்), சிறிநிதி, காலஞ் சென்றவர்களான ஜெயராசு, சிறிராசன் ஆகியோரின் அன்புத் தாயும் குணாளன் (லண்டன்), தர்மகுலசிங்கம், சோபா (சுவிஸ்), இந்து (சுவிஸ்), கல்பனா ஆகியோரின் அன்பு மாமியும் ஐயாத் துரை, பவளம், பூபாலசிங்கம், தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெனார்த்தன் (லண்டன்), கீர்த்திகா (லண்டன்), திலக் (லண்டன்), கீரா (லண்டன்), சாய்த்தியன் (சுவிஸ்), அப் சரா (சுவிஸ்), நாகவி (சுவிஸ்), கெருஜா (சுவிஸ்), தமிழினி, றெக்சன், திலக்சன், பிரபுராஜ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2007) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப.10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அன்னங்கை, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய். (63474)

தகவல்: பிள்ளைகள்.

### வைரமுத்து ஞானசேகர் (சேகர்)

நயினாதீவு வடக்கைப் பிறப்பிடமாகவும் சுவிற்ஸர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து ஞானசேகர் 06.08.2007 திங்கட்கிழமை சுவிற்ஸர்லாந்தில் காலமானார்.

அன்னார் தர்ஷினியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வைரமுத்து- நவரெத்தினசுந்தரி தம்பதியரின் அன்பு மகனும் தங்கவடிவேல்-நேசராணி தம்பதியரின் அன்பு மருமகனும் பிரபாகர், பாஸ்கர் (கனடா), சுதாகர் (சமுர்த்தி உத்தியோகத்தர்-வேலணை), சிவலேஜினி, ஜெயகரன், சத்தியவான், நவநீதன் ஆகியோரின் சகோதரரும் தர்மினி, அசோக், திலீப் (குட்டி), சூர்யா, நவஜோதி, கோகுலவதனி, சுஜீபன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முதலாம் வட்டாரம், நயினாதீவு. (63478)

தகவல்: வை.சுதாகர் (சகோதரன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவைக் கந்தன் தேர்த்திருவிழா நாளை

யாழ்ப்பாணம்,ஓக.10

சரித்திரப்பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய தேர்த்திருவிழா நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை ஆடி அமாவாசை தினத்தன்று தேர்த்திருவிழா இடம் பெறும். கீரிமலைக்கு மாவை ஆலய வேல் பெருமான் எழுந்தருளி அங்கு தீர்த்தம் இடம் பெறவுள்ளது.

இந்த ஆலய சர்வசித்து வருட காம்யோற்சவம் கடந்த மாதம் 19ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

பக்தர்களின் வசதிகருதி இலங்கை போக்குவரத்துச் சபை வழமைபோல் தெல்லிப்பழை சோதனை நிலையத்தில் இருந்து மாவிட்டபுரம் கோயில் வரை பஸ் சேவையை நடத்தி வருகின்றது.

அத்துடன் ஆலய அர்ச்சனைக்குத் தேவையான பொருள்கள், ஆராதனைப் பொருள்கள், மாவிளக்கு ஏற்றுவதற்கான பொருள்கள் போன்றவற்றை ஆலய தெற்கு வீதியில் உள்ள விற்பனை நிலையங்களில் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. (203)

# கீரிமலையில் கண்டகி தீர்த்தம்

கீரிமலை நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரர் ஆலய ஆடி அமாவாசை கண்டகி தீர்த்தம் நாளைமறுதினம் அதிகாலை விசேட பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

கீரிமலை தீர்த்தக் கேணியில் இடம்பெறும் தீர்த்தத்திற்கு மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய வேல் பெருமான் எழுந்தருளிச் சென்று அங்கு தீர்த்தம் இடம்பெறும். பக்தர்கள் கண்டகி தீர்த்தத்தில் தீர்த்தமாடி தங்கள் முன்னோர்களை நினைவு கூர்ந்து நெய்தீபம் ஏற்றி ·வழிபடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை சோதனைச்சாவடி, சேந்தாங்குளம் சோதனைச்சாவடி போன்றவற்றால் பக்தர்கள் ஆலயத்திற்குச் செல்வதற்கு படையினரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை - நகுலேஸ்வர ஆலய புனரமைப்பு வேலைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இதற்கான நிதி உதவியை வழங்குமாறும் பக்தர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (203)

## பொருளை உணராமல் படிக்கும் கல்வியால் பயனில்லை

நியாயமான முறையில் சம்பாதித்த பொருளை கொடுக்கத் தகாதவருக்குக் கொடுப்பது, தகுந்தவர்க்குக் கொடாதிருப்பது ஆகிய இரண்டுமே தவறு!

தானங்களில் சிறந்தது அன்னாதானம். அதிலும் சிறந்தது கோதானம், பூதானம், அவற்றிலும் உயர்ந்தது கல்வித் தானம்!

மனத்தில் இறைவனின் திருவுருவும், வாக்கில் இறைவனின் பெயரும், உணவாக இறைவனின் பிரசாதமும், அபிஷேக தீர்த்தமும் கொண்டவன் அச்சுதனுக்குச் சமமானவன்.




முன் பார்க்கப்படாமலும், அறிவித்துக் கொள்ளாமல் யதேச்சையாக வருபவர்களே அதிதிகள். அவ்வாறு களைப்புடன் வந்த அதிதியை இன்முகத்தோடு உபசரிப்பவன், ஒரு காளையுடன் நூறு பசுமாடுகளை தானம் செய்த பலனை அடைகிறான்.

தீபத்தை புருஷர்கள் அணைப்பதும், பூசணிக்காயை பெண்கள் உடைப்பதும் வம்சத்தை அழிக்கும் வழிகளாகும்.

பொருளை உணராமல் படிக்கும் கல்வியால் பயனேதுமில்லை. அந்தப் படிப்பு வெறும் சுமையே ஆகும்.

அன்னைக்கு நிகரான தெய்வமும், தந்தைக்கு சமமான குருவும் இல்லை. பணிவிடை செய்வதைத் தவிர, அவர்களின் கடனைத் தீர்க்க வேறுவழி இல்லை.

*நன்றி : ஞானச்சுடர்.*

# மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் களையவேண்டியது அரசின் பொறுப்பு

## ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச கூறுகின்றார்


கொழும்பு,ஓக.10

'சர்வதேச ரீதியில் இலங்கைக்கு எதிராக மேற்காள்ளப்பட்டு வரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களைக் களைய வேண்டியது அரசின் பெரும்பொறுப்பாகும்.''

இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க கூறியிருக்கிறார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவறு தெரிவித்தார். அவர் அங்கு கூறியவை வருமாறு:-

சர்வதேச ரீதியில் அரசுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் பிரசார நடவடிக்கைகளை உரிய முறையில் முறியடிக்காவிட்டால் அவை பெரும் பின்விளைவுகளை ஏற்படுத்தும். சர்வதேச மற்றும் உள்நாட்டு சூழ்ச்சிகளைத் தடுப்பதற்கு அரசு முயற்சி களை மேற்கொள்ள வேண்டும்.



மேலும், அரசு இன்று பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கியிருக்கின்றது. அரசிலிருந்து வெளியேறுவதற்கு மேலும் ஒரு கட்சி தயாராகி வருகின்றது. அவர்கள் அதற்கான தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். - என்றார் அவர். (சி)

# ஜனாதிபதி சீனாவுக்குச் சென்ற செலவு 5½ கோடி ரூபாவுக்கும் அதிகமானது!



கொழும்பு,ஓக.10

இந்த வருட ஆரம்பத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது பரிவாரங்களும் சீன நாட்டுக்கு விஜயம் மேற் கொண்ட வகையில் ஐந்தரைக் கோடி ரூபாவுக்கும் அதிகமான பொது பணம் செலவு செய்யப்பட்டுள்ளது. 2007ஆம் ஆண்டு பெப்ரவரி 27ஆம் திகதி முதல் மார்ச் 4ஆம் திகதிவரை ஜனாதிபதியும் அவரது குழுவினரும் சீனாவில் தங்கியிருந்துள்ளார்கள். ஜனாதிபதியுடன் 192பேர் இந்தப் பயணத்தில் இடம்பெற்றிருந்தனர்.

இத்தகவல்களை அரசாங்கத்தின் பிரதான கொறடாவான ஜெயராஜ் பெர் னாண்டோ புள்ளே நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

ஐ.தே.கட்சி எம்.பி ரவி கருணாநாயக்க கேட்ட வாய்மூலமான கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும்போதே இத்தகவல்கள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டன.

ஜனாதிபதியுடன் சீனாவுக்கு விஜயம் செய்தவர்களில் 16 அமைச்சர்கள், ஊடக மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் உட்பட்ட குழுவினர் 60 பேர், சமையல்காரர்கள் 6 பேர், பின்னவல யானைகள் பராமரிப்பு பகுதியிலிருந்து 3 பேர், பௌத்தக் குழுவினர் 12 பேர் மற்றும் வர்த்தக சமூகத்தினர் 54 பேர் அடங்கியிருந்தனர்.

இந்தப் பயணத்துக்கான பணம் பின்வருமாறு அறவிடப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் ஒதுக்கீடு 27 மில்லியன் ரூபாய். ஏற்றுமதி வளர்ச்சி சபையிலிருந்து 10 லட்சம் ரூபா. இலங்கை உல்லாச பயண சபையிலிருந்து 867, 582 ரூபாய் ஆகும். இந்தப் பயணத்துக்கான விமானக் கட்டணம் மட்டும் ரூ.24 மில்லியன் என்று கணிக்கப்பட்டது. (ப)

# தமது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுமானால் ஆயுதங்களைக் கைவிட கருணா குழு தயாராம்

கொழும்பு,ஓக.10

''எமது தற்பாதுகாப்புக்காக எமது இராணுவப்பிரிவை வைத்திருப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். எமது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்பட்சத்தில் அதைக் கலைத்துவிடத் தயாராக இருக்கிறோம்.'' - எனக் கருணா குழு தெரிவித்திருக்கின்றது.

நியூயோர்க்கைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமைகள் அவதானிப்பு மையம் கடந்த திங்கட்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தம் அணி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் உண்மைக்குப் புறம்பானவை என்று தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இக்கருத்தினை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அணியினர் (கருணா குழு) தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சிறுவர்களை எமது படையணியில் நாம் இணைத்துக்கொள்ளவில்லை. இராணுவத்தின் உதவியுடன் கடத்தல், கப்பம் பெறுதல் போன்றவற்றிலும் மற்றும் பொலிஸாருடன் இணைந்து வீதி ரோந்துகளில் நாம் ஈடுபடுகிறோம் என்று கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் உண்மைக்குப் புறம்பானவை.

ஜனநாயக அரசியலில் பிரவேசித்துள்ள நாம் எந்தவொரு பாரிய இராணுவ முன்னெடுப்புகளிலும் ஈடுபடப்போவதில்லை. - என்றுள்ளது.

(சி)

# இலவசக் கல்வி முறைமைக்கு மஹிந்த சகோதரர்கள் ஆப்பு!

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விசனம்



கொழும்பு,ஓக.10

டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரவினால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக் கல்வித் திட்டத்துக்கு ஆப்பு வைக்கும் வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், அவரது சகோதரர்களும் செயற்பட்டு வருகின்றனர் என குற்றஞ்சுமத்தியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

பாடசாலைகளில் முதலாம் தரத்துக்குப் பிள்ளைகளை அனுமதித்தல் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கியிருக்கும் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் குறித்து கருத்துத் தெரிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடொன்றை ஐ.தே. கட்சியின் தலைமைப்பீடமான ஸ்ரீகோத்தாவில் நேற்றுமுன்தினம் நடத்தியபோது ரணில் மேற் கண்டவாறு விசனித்தார்.

தரம் ஒன்று அனுமதி தொடர்பான விடயம் - ஆவணம் - நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படாத நிலையில், தேசிய பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்களுக்கு அது குறித்த விவரம் தெரிய வந்திருக்கின்றது. இது எவ்வாறு என்றும் ரணில் வினா தொடுத்தார்.

அனுமதி தொடர்பான ஆவணம் குறித்து கல்வியமைச்சருக்கோ, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கோ இதுவரை தெரிந்திருக்கவில்லை. தேசிய கல்வி ஆணைக் குழுவும் கைவிரிக்கின்றது.

இவ்வாறு எந்தத் தரப்பினருக்கும் தெரிந்திருக்காத இந்த விடயம் பழைய மாணவர் சங்கங்களுக்கு மட்டும் எவ்வாறு கிட்டியது? இதற்கான பதிலை நாடாளுமன்றில் தெரியப்படுத்த வேண்டியது அரசின் கடமை என்றும் ரணில் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி, அவர் சகோதரர்கள், ஜனாதிபதிச் செயலகம் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் இந்த விடயத்தின் சூத்திரதாரிகள். எனவே அவர்களே இது தொடர்பான சரியான விளக்கத்தைத் தர வேண்டும்.

- என்றார் எதிர்க்கட்சித் தலைவர்.

# இ.தொ.காவினர் ஓரிரு தினங்களில் அமைச்சுப் பதவிகளை ஏற்பராம்!

கொழும்பு, ஓக.10

அமைச்சுப் பதவிகளைத் துறந்திருக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓரிரு தினங்களில் தமது அமைச்சர் பதவிகளை மீள ஏற்றுக்கொள்வர் எனக் கூறப்படுகின்றது.

இந்த விடயத்தை உறுதிபடத் தெரிவித்திருக்கின்றார் ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே.

தகவல் திணைக்களத்தில் புதனன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட் டில் கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்ட விடயத்தைக் கூறினார்.

ஜனாதிபதியின் சகோதரரும் அவரின் ஆலோசகருமான பஸில் ராஜபக்ஷவுடன் வாக்குவாதப்பட்டு, முரண்பட்டு அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர்கள் பதவிக ளைத் துறந்த இ.தொ.காவின் உறுப்பினர்கள் அரசுக்கு நிபந்தனையின் அடிப்படையில் ஆதரவு வழங்குவார்கள் என அறிவித்திருந்தனர்.

இந்நிலையிலேயே இன்னும் ஓரிரு தினங்களில் இ.தொ.காவினர் மீளப் பதவிகளைப் பெறுவர் என அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்திருக்கின்றார்.

(சி)

# சனி மாற்றம் 05.08.2007 முதல் உங்கள் ராசிக்குரிய பலன்

விருச்சிகம்

சங்கானையூர் சண்முகரத்தினம்

**விருச்சிகம்:-** (விசாகத்து 4 ஆம் கால் அனுஷம், கேட்டை ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு)

உங்களுடைய இராசிக்கு 10 ஆம் வீடான சிங்கராசியில் 05-08-2007 இல் இருந்து சனிபகவான் கேதுவுடன் சேர்ந்திருப்பதால் அடுத்த 2 1/2 வருடங்களுக்குத் தொழில் நிலையில் பிரச்சினைகளும், கஷ்டங்களும் தரக்கூடிய பலனாகும். முக்கியமாக தொழில் அதிபர்கள், தொழிலாளர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு தொழில்நிலைக்கேடுகள் வந்து சேரக் கூடும். முக்கியமாக 05-08-2007 தொடக்கம் 16-09-2007 வரை தொழில் நிலை கெடும் சாத்தியம் உண்டு அல்லது தொழில் செய்யுமிடத்தில் மோதல், பிரச்சினைகள் தோன்றலாம். சிலர் தொழில் செய்யுமிடத்தை மூடிவிடக்கூடியபலனும் வரலாம்.

குடும்பஸ்தர்களுக்கு சுக்கிரனுடைய பலன் ஓரளவு சுகம்தரும். கீழ்ச் சகோதர பகையும் வேலையாள்களால் பிரச்சினைகளும் ஏற்படும்.

பூமி, வீடு உடைமை, சொத்தால் பகீரதப் பிரயத்தனம் ஏற்படுவதற்குப் பலன் உண்டு. புத்திரர் சுகமுண்டு. புத்திரரால் நன்மையுண்டு. மாமன் வழி உறவுகள் நன்மை தராது.

திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் நிறைவேற 15-11-2007 வரை காத்திருக்கவேண்டும். மூத்த சகோதர சுகம் கிடைக்கும். வெளிநாடு செல்வது போன்ற பலன் 10-04-2008 வரை நன்மைதர இடமில்லை

**மாணவர்களுக்கு:-** 2008 ஆம் ஆண்டு கல்வியால் பூரண சுகமுண்டு. உயர்கல்விக்குரிய மாணவர்களுக்கு பெறுபேறு வெற்றி தரும். சிலருக்கு வெளிநாட்டுக் கல்வியும் நன்மைதரும். துலாராசியில் சனி இருக்கப் பிறந்தவர்கள் வெளிநாட்டுச்சீவியத்தை மேற்கொள்ளப் பலன்வரும்.

**உத்தியோகஸ்தர், தொழிலாளர்களும் :-** 10 இல் சனி கேதுவுடன் இருக்க சனி பார்ப்பது செய்தொழில் முடக்கம் 16-09-2007 வரை உண்டாகலாம். அப்பால் 10-04-2008 இன் மேல் தொழில்நிலைச் சிறப்பும், வருமானமும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் யாழ்.நகரில் Bata







எம்மிடம் மாணவர், உத்தியோகத்தர், வாலிபர், இளம் பெண்கள், சிறு பிள்ளைகளுக்கான அழகாக வடிவமைக்கப்பட்ட

சப்பாத்துக்கள், பிளற்போம் பாதணிகள், ஹீல்ஸ், லெதர் பாதணிகள், நவீன ரபர் பாட்டாக்கள், 'ஆரோக்கிய' ரபர் பாட்டாக்கள்

என்பன உடன் பெற்றுக்கொள்ளலாம்.

**லக்ஷ்மி ஒகனைசேஷன்**

(வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்)

இல. 25, 4ஆம் லேன்,

பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(எமது இடம் பிறவுண் வீதியில் உள்ள மின்சார நிலைய காரியாலயத்திற்கும் கலட்டிச் சந்திக்கும் இடையில் அமைந்துள்ளது)

(சி/53101)



# United Nations World Food Programme Sri Lanka
## VACANCY ANNOUNCEMENT
VA Number : 2007 - 18
## Deadline for application: 17 August 2007

The World Food Programme (WFP), the food aid organization of the United Nations is seeking applications from Sri Lankan national candidates preferably from the Northern Province to fill the following positions:

**Post Title: Logistics Assistant**
**Number of posts: 2**
**Grade: SSA - 4**
**Contract Type: Special Service Agreement (Limited duration)**
**Duty Station: WFP Sub- Office, Vavuniya, Jaffna,**

**Responsibilities:** Under the overall supervision of the Logistics Officer, the Logistics Assistant will be responsible and accountable within assigned duties as per details given below

- Assist with logistics operations including all logistics assets in order to ensure timely and cost-effective delivery of WFP cargoes;
- Assist in the training of staff particularly ensuring that support staff are adequately trained, cross trained and identify any additional training needs to achieve high working standards;
- Follow up on projections of needs and call forward requirements;
- Follow the movement of food and non-food items for the projects and operations in the country;
- Collect regional and statistical information related to needs in various locations;
- Assist the sub-stations in the distribution and control of food and non-food aid;
- Organize and supervise the distribution of food at sites and maintain appropriate records;
- Prepare contracts for the transport of food and non-food items in both emergency and development operations;
- Initiate regular visits to stores to ensure conformity with regulations for storage of food and non-food items;
- Maintain cost data on various means of transport in the country;
- Deliver WFP standard waybills to those involved in the transport of WFP operations; ensure that the proper paperwork has been prepared;
- Assist with the accounting, reporting on food and non-food items and ensure that internal control systems are functioning and that all relevant records are maintained;
- Assist in contingency planning and logistics preparedness reviews;
- Supervise logistics clerks as required;
- Perform other related duties as assigned.

**Qualifications:**

**Education:** Secondary school education, preferably supplemented by technical or university courses in a field related to WFP logistics/transport activities.

**Experience:** At least five years of practical commercial/professional experience in one or more of the transportation and ancillary sectors: port operations, shipping, clearing and forwarding, air operations, large scale road/rail transport and distribution management.

**Language:** Very good knowledge of English and Local languages.

**Knowledge:** Experience utilizing computers, including word processing, spreadsheet and other software packages. Knowledge of WFP administrative regulations and rules, and WFP policies and procedures in the area of work.

**Other Desirable Skills:**
Working knowledge, training and/or experience using MS Word, MS Excel, MS PowerPoint and other WFP software.

Applications along with a detailed CV should be addressed to **Human Resources Officer, UN World Food Programme,202-204,BauddhalokaMawatha, Colombo 7 or by email: "srilanka.application@wfp.org".**

The deadline for submission of application is **Friday 17 August, 2007.**

Preference will be given to candidates who have work experience with other UN agencies and INGO's operating in the Northern Province.

Women candidates are encouraged to apply.

**Candidates who have applied for this position previously need not respond to this advertisement.**
**Only short-listed candidates with required qualifications will be contacted.**

**WFP is the world's largest humanitarian agency; each year, WFP gives food to an average of 90 million people to meet their nutritional needs, including 58 million hungry children, in at least 80 of the world's poorest countries. WFP has been providing food assistance to the Government of Sri Lanka since 1968.**
**WFP - We Feed People.**

(63460)



யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், யாழ்ப்பாணம்

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

**காலம்** : 26.08.2007 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி
**இடம்** : குமாரசுவாமி மண்டபம்
**தலைமை** : வி.ஸ்ரீசக்திவேல் அவர்கள்
**குறிப்பு** : 12.08.2007 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த மேற்படி வருடாந்தப் பொதுக்கூட்டம் ஆடி அமாவாசையை முன்னிட்டு 26.08.2007 ஞாயிற்றுக் கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளது.

பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

யா.இ.ப.மா.ச., யாழ்ப்பாணம்.

வி.ஸ்ரீசக்திவேல் தலைவர். (63470) அருணகிரிநாதன் செயலாளர்.



## கோழிக்குஞ்சு விநியோகம்

நம்பர் -1 BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் சிவப்பு, வெள்ளை, பேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
★ ராஜா, நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
★ மதுரா கால்நடைத் தீவன விற்பனை, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
★ P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (63119)

T.P No - 2222867, 2223529



## வெற்றி வழி A/L தமிழ் நாக.தமிழிந்திரன்

2008 மீட்டல் Paper } புதிய
2009 ஆரம்பநிலை நுட்பு } பிரிவு

★ நைரேடுகள் வழங்கப்படும்
★ மாவிக்கூர் 20 விசேட வகுப்புகள் இலவசம்.
★ பாடத்திட்டம் முழுமையாக பூர்த்தியாக்கப்படும்.

மதுரம் இன்ஸ்ரிரியூட், கட்டப்பிராய்.



## கண்ணீர் அஞ்சலி



லங்கா ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியின் முன்னாள் அதிபரும் எங்கள் ஆசானுமாகிய வைத்திய கலாநிதி

**A.V. இராஜரட்ணம் (A.V.R)**

அவர்கள் சிவபதமடைந்ததையிட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து, அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**Dr.பொன். சண்முகரத்தினம் A.M.O.**
(வலி.கிழக்கு பிரதேசசபை, ஆயுர்வேத வைத்தியசாலை, முன்னாள் அரச சேவை பிரதம வைத்திய அதிகாரி.)

**Dr.ச.பிறேமானந்தி**
(விரிவுரையாளர், லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி, அம்பாள் வைத்தியசாலை.)

(63466) இல.31, வளாக வீதி, திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம்.



## English Courses

வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்
அச்சடித்த பாடங்கள், பயிற்சிகள்

*** Spoken & Grammar**

வெளி நாடு செல்லவுள்ளோர்.
பாடசாலை விலகியோர்.

- * Preparation for O/L, A/L Exams
- * Higher Studies (GAQ, B.A., A.A.T...)
- * Cambridge ESOL Exams (Starters, Movers, Flyers, Pet...)

**By: Mr.B.Ruban** (A/L English Teacher & BBA)

தொடர்பு: Jaffna Technical Institute, 077 9785749

(63475)



## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

**தவராஜசேகரம் தவச்செல்வன்**

(ராஜன்)

மண்ணில் 02-01-1978

விண்ணில் 22-07-2006

திதி: அபரபக்க திரயோதசி 10.08.2007

தவமிருந்து பெற்ற தவச்செல்வா
நீ தவறி ஓராண்டு ஆகுதடா!
நாம் கதறி அழுகின்றோம்
கதறித் துடிக்கின்றோம்!
பாரினில் மீண்டும் உதித்திடுவாயோ?.

மட்டுவில் தெற்கு.

உன் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

(63443)



## 18ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 26 06 1936

உதிர்வு 30 07 1989

**திருமதி மாசிலாமணி பாக்கியமலர்**

திதி: 10.08.2007

தேவருலகில் வாழ்கின்ற- எங்கள்
தெய்வத்தின் திருநாளில்
பாமலர் தூவுகின்றோம்- நாளும்
"பாக்கியமலர்" காவுகின்றோம்

பேசிச்சிரித்த முகம்பார்த்து- தாய்மை
பெட்டகத்துள் தவழ்கின்றோம்
வீசிச் சிரிக்கும் பொன்காற்றில்- மாசில்
வீணையின் தவமாகின்றோம்

அம்மாவைப் பாடிடுவோம்- தினமும்
அம்மாவைப் பாடிடுவோம்
இம் மாநிலம் இருக்கும் வரையும் பெற்ற
எம் தாயை என்றும் வணங்குவோம்.

ஆண்டுகள் பல கழிந்தாலும் அன்பு மறவாத
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
சகோதரிகள், மைத்துனர்கள், உறவினர்கள்.

கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

(63467)



## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி அதிபர் சு.புண்ணியசீலன் அவர்களின் துணைவியார் திருமதி ஜமுனா புண்ணியசீலன் அவர்களின் தாய்

**திருமதி நாகபூசணி கனகநாயகம்**

(ஓய்வு பெற்ற ஆசிரியை) அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் கழகம்**
(யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை, யா/பொன் பரமானந்தர் ம.வி).

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**
(யூனியன் கல்லூரி தெல்லிப்பழை),

**பழைய மாணவர் சங்கம்**
(யூனியன் கல்லூரி தெல்லிப்பழை).

(63465)


## நெடுந்தீவுக்குரிய சேவைக்கென புதிய படகு அமைக்க நடவடிக்கை

நெடுந்தீவுக்கான சேவைகளை மேற்கொள்வதற்கு புதிய படகைக் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அமைச்சர் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார். இதன்போது நெடுந்தீவுக்கான புதிய படகு தொடர்பாகக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நெடுந்தீவுக்கான புதிய படகு கட்டுவதற்கென 10 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. புதிய படகைக் கட்ட இத்தொகை போதாது எனக் கூறப்பட்டது. எனினும் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் வழங்கி படகு கட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதுடன் மேலதிக நிதியையும் விரைவில் வழங்க ஏற்பாடு செய்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(203-111)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 28 . 12 . 1945

உதிர்வு 22 . 07 . 2006

**அமரர் அப்பாசியார் நவமணி**

திதி: துவாதசி

உணர்வுகளை உரமாக்கி உயர்விடம் தேடி
கனவுகளும் கலைந்து காலனிடம் ஓடி
நவ மணியாக ஒளி வீசிய ஐயனே!
கனமாக ஓடியது பன்னிரு திங்களே!!
மௌனமாகப் பிரார்த்திப்போம் உம் ஆன்ம சாந்திக்கே!!!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அராலி வீதி, ஓட்டுமடம். (63462)

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் (இந்தியா).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்: 222 9944

# சர்வதேசத்தின் பிரதிபலிப்பு தெற்கை உசுப்பேற்றுகிறது

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை விவகாரத்தை, இங்குள்ள பௌத்த - சிங்கள பேரினவாதிகளின் கைகளில் சிக்கியுள்ள அரசுத் தலைமை எவ்வாறு கையாளுகின்றது என்பது இப்போதுதான் சர்வதேச சமூகத்துக்கு உண்மையாக - உறைப்பாக - புரியத் தொடங்கியிருக்கின்றது.

மேலாண்மைத் திமிரோடு சிறுபான்மையினரான தமிழர் மீது பேரினவாதம் கட்டவிழ்த்து விட்டிருக்கும் அரச ஒடுக்குமுறையை சர்வதேச சமூகம் நன்கு உணர்ந்துகொள்ளும் நிலைமை ஏற்பட்டிருப்பதால் அதனிடமிருந்து 'சூடான' பிரதிபலிப்புகள் வரத் தொடங்கியிருக்கின்றன.

அதனால் தென்னிலங்கை பௌத்த - சிங்களப் பேரினவாத சக்திகள் சர்வதேச சமூகத்துக்கு எதிராகத் துள்ளிக் குதிக்கவும் ஆரம்பித்து விட்டன.

தமிழர் தரப்பின் விடுதலைப் போராட்ட சக்தியான தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாத இயக்கமாகச் சித்திரித்து, அந்தப் பட்டியலில் சேர்த்து, அதைத் தடை செய்யும் நடவடிக்கையை இதே சர்வதேச சமூகம் மேற்கொண்டபோது, துள்ளிக்குதித்து, குதூகலத்தோடு ஆரவாரமாக வரவேற்ற தென்னிலங்கை, அரசின் அதே விவகாரத்தை - அரச பயங்கரவாதத்தை - சர்வதேச சமூகம் கணிப்பிடத் தொடங்கி, அதன் பிரதிபலிப்புகளை வெளிப்படுத்த ஆரம்பித்ததும் மறுபுறமாக சீறத் தொடங்கியிருக்கின்றன.

அரச பயங்கரவாதத்தைச் சுட்டிக்காட்டி அதற்கு எதிராக சர்வதேச சமூகம் முன்வைக்கும் குற்றச்சாட்டை "இலங்கையின் 'சட்டரீதியான' அரசுக்கு எதிரான சதி நடவடிக்கை!" என வர்ணிக்கின்றார் ஜே. வி. பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க.

ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் புஷ் நிர்வாகம் பயங்கரவாதத்தில் ஈடுபடுவதைத் தட்டிக்கேட்க முடியாத மனித உரிமைகள் அவதானிப்பு மையம் போன்ற சர்வதேச அமைப்புகள், இலங்கை அரசுக்கு எதிராக மட்டும் அத்தகைய குற்றச்சாட்டுகளை முன்வைப்பது திராணியற்ற செயல் எனச் சீறியிருக்கின்றார் ஜே. வி. பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா.

தனது இந்த வாதத்தின் மூலம் இலங்கை அரசு தமிழர்களுக்கு (அல்லது புலிகளுக்கு) எதிராக பயங்கரவாதக் குற்றங்களை - மனித உரிமை மீறல் குற்றங்களை - இழைக்கின்றது என்பதை வெளிப்படையாகக் கூறாமலேயே ஒப்புக்கொள்கின்றனர் ஜே. வி. பியினர் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

"மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை அரசு, தனக்குரிய - சட்டரீதியான - முறைகளில் விசாரிக்கின்றது என்பதைத் தெளிவுபடுத்தும் போது, இதில் சர்வதேச சக்திகள் ஏன் முந்திக்கொண்டு தலையிடுகின்றன?" - என்றும் ஜே. வி. பி. தலைவர்கள் விசனிக்கின்றார்கள்.

நல்லது. தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதிகாரத்துக்கு வந்து 21 மாதங்களாகிவிட்டன. அவரது ஆட்சி ஏற்பட்ட நாள் முதலே நாட்டில் மனித உரிமைகள் பேணும் நிலைமை மோசமடைந்து வருகின்றது. குறிப்பாகத் தமிழர்களுக்கு எதிரான அரச ஒடுக்குமுறை தீவிரமடைந்திருக்கின்றது. ஆட்கடத்தல்கள், வல்வந்தமாகக் காணாமற் போகச் செய்தல்கள், படுகொலைகள், கப்பம் அறவிடல் என்று தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் எல்லை மீறியிருக்கின்றன.

இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக இரண்டு விதமான நியாயப்பாடுகள் தென்னிலங்கையால் முன்வைக்கப்படுகின்றன. இத்தகைய மனித உரிமை மீறல்கள் 'பயங்கரவாதிகளால்' புரியப்படுவனவாக - அல்லது 'பயங்கரவாதிகளுக்கு' எதிராக மட்டும் புரியப்படுவனவாக - சித்திரிக்கப்படுகின்றன. அல்லது இவை குறித்து விசாரித்து அவற்றுக்கு காரணமான சூத்திரதாரிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என அரசுத் தரப்பால் திரும்பத் திரும்ப விளக்கங்கள் கூறப்படுகின்றன.

உதட்டளவில் கூறப்படும் இந்த விளக்கங்களின் உள்ளார்த்தங்களை - நியாயங்களை - உண்மையை - சர்வதேசம் சாவகாசமாகப் பொறுத்துப் பொறுத்துப்பார்த்து, நன்கு புரிந்துகொண்ட நிலையிலேயே இப்போது தனது அதிருப்தியைப் பகிரங்கமாக வெளிப்படுத்தும் கட்டத்துக்கு வந்திருக்கின்றது.

வல்லரசுகள் பிற தேசங்களில் புரியும் - அல்லது புரிந்தவை எனக் கூறப்படும் - மனித உரிமை மீறல்களைச் சுட்டிக்காட்டி, தனது மனித உரிமை மீறல் நடவடிக்கைகளைத் தென்னிலங்கை சர்வதேச மட்டத்தில் நியாயப்படுத்திவிட முடியாது.

அதேபோல, தென்னிலங்கையினால் 'இலங்கைத் தீவின் பயங்கரவாதிகள்' எனச் சித்திரிக்கப்படுகின்ற தரப்பினால் புரியப்பட்டவை என்று கூறப்படும் மனித உரிமை மீறல்களைச் சுட்டிக்காட்டி, சட்டரீதியான அரசு எனத் தன்னை அழைக்கும் இலங்கை, தனது மனித உரிமை மீறல் நடவடிக்கைகளை நியாயப்படுத்தி விடவும் முடியாது.

இத்தகைய பொருத்தமற்ற நியாயங்களைப் பொருட்படுத்துவதற்கும் அதைக் கேட்டு வாய் அடங்கிப் போய் மௌனம் காப்பதற்கும் சர்வதேச சமூகம் ஏமாளிகளின் கூட்டம் அல்ல.

கொழும்பின் இந்த ஏமாற்று எத்தனங்கள் எத்தனை நாட்களுக்குத் தான் பலிக்கும்? மனித உரிமை மீறல்களைத் தடுக்கவும், அவற்றைப் புரிந்தோரை சட்டத்தின் முன் நிறுத்தவும் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்ற கொழும்பின் இழுத்தடிப்பு சமாதானம் இப்போது காலாவதியாகிப் புளித்துப் போய்விட்டது. செயலில் - யதார்த்தத்தில் எதுவுமே இல்லை என்பதையும் களத்தின் உண்மை - மெய்மை - நிலையையும் புரிந்து கொண்டுள்ள சர்வதேச சமூகம், தனது அதிருப்தியை மெல்லக் கசிய விடத் தொடங்கியிருக்கின்றது. அதைத் தாங்க முடியாமல் தென்னிலங்கை துடிக்கின்றது.

போகப் போக இது இன்னமும் சூடாக இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

# மூதூரில் கொலையான 17 பேரின் குடும்பங்களுக்கு அரசு நஷ்டஈடு

## திட்டம் ஒன்றை வகுப்பதாக அமைச்சர் தகவல்

கொழும்பு, ஓக. 10

மூதூரில் அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற மோதல்களின்போது, கொலையுண்ட மனிதநேய பணியாளர்கள் 17 பேரின் குடும்பங்களுக்கும் இழப்பீடு வழங்குவதற்கான திட்டமொன்றை அரசாங்கம் உருவாக்கிவருவதாக மனித உரிமைகள் துறை அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

மூதூரில் கொலையுண்ட மனித நேயப் பணியாளர்களின் ஞாபகார்த்த நிகழ்வில் அமைச்சர் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார்.

மூதூரில் மரணமானவர்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு மட்டுமின்றி அந்தக் காலப் பகுதியில் காணாமற்போய் பின்னர் கண்டுபிடிக்கப்படாதவர்களின் குடும்பங்களுக்கும் நஷ்டஈடு வழங்குவதற்கான வழிமுறைகள் குறித்து ஆராயப்பட்டுவருகின்றது என்று அமைச்சர் தெரிவித்தார்.

கொலையுண்டவர்களின் உடல்களிலிருந்து எடுக்கப்பட்ட குண்டுகள் தொடர்பான இலங்கை அரசின் நிலைப்பாடு சரியானது என ஆஸ்திரேலிய நிபுணர் டாக்டர் டொட் நோமையான முறையில் ஒப்புக்கொண்டுள்ளார். தற்பொழுது குற்றவாளிகளை சட்டப்படி கண்டு பிடிப்பதற்கான ஒரு நிலைக்கு வந்திருக்கிறோம்.

அந்தத் துன்பகரமான தினத்தில் கொலையுண்ட 17 இலங்கையர்களும் செய்துள்ள மனித நேயப் பணிகளின் பங்களிப்பை நாம் நினைவு கூருகின்றோம். அவர்களின் குடும்பத்தவர்களின் துன்பங்களைப் பகிர்ந்து கொள்கின்றோம். இவ்வாறு சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருப்பதையும் நாம் உறுதி செய்துகொள்வோம்.

மனித நேயப் பணிகளில் ஈடுபட்டுள்ளோரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பை அரசாங்கம் உணர்கிறது. எனினும் அது கஷ்டமான காரியமாகவே தொடர்கிறது. நாட்டில் வழமையான சூழ்நிலையையும், ஸ்திர நிலைமையையும் உண்டாக்குவதற்குப் பதிலாக, பயங்கரவாதத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் குழப்பங்களை உண்டாக்கி வருகின்றனர். அதனால் பொதுவாகவே மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது மிகவும் கடினமான காரியமாகவிருக்கிறது - என்று அமைச்சர் தனது பேச்சில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-ப)

# கிழக்கில் உள்ளூராட்சித்தேர்தல்கள் சுதந்திரமாக நடைபெற உதவுவோம்

## கருணா குழுவினர் அறிவிப்பு

கொழும்பு, ஓக. 10

தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் (கருணா அணி) கிழக்கிலங்கையில் உள்ளூராட்சித் தேர்தல்கள் சுதந்திரமாகவும் நீதியான முறையிலும் நடைபெறுவதற்கு முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கும் என்று உறுதியளித்துள்ளது.

நவம்பர்மாதம் நடுப்பகுதியில் நடத்தப் படலாம் என்று எதிர்பார்க்கப்படும் கிழக்கிலங்கைத் தேர்தல்களின் போது ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி உட்பட ஒத்த இலட்சியமுள்ள வேறு எந்த அமைப்புடனும் கூட்டுச்சேர்ந்துகொள்ள தாங்கள் தயாராகவுள்ளதாகவும் கருணா அணியினர் தெரிவித்துள்ளனர்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் பிரிவுத் தலைவர் திலீபன், கொழும்பில் இருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியின்போது, ஆயுத பாவனை குறைக்கப்படும், வாக்காளர்களை ஈர்ப்பதற்கு அச்சுறுத்தும் தந்திரங்கள் எதுவும் கைக்கொள்ளப்படமாட்டாது என்றுகூறினார்.

உள்ளூராட்சிசபைகள் ஒவ்வொன்றுக்கும் வேட்பாளர்களை நிறுத்தத் திட்டமிட்டு வருகின்றோம். எட்டு உள்ளூராட்சி சபைகளுக்குமான வேட்பாளர்களைத் தீர்மானிக்கும் ஏற்பாடுகளில் ஈடுபட்டுள்ளோம். தெரிவுக் குழுவின் தலைவராக கருணாஅம்மானும் செயலாளராகப் பத்மினியும் பணியாற்றுகின்றார்கள் என்றார்அவர். (அ-ப)

## நகைத் தொழிலாளி கைது; ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஓக.10

இளைஞர் ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆடியபாதம் வீதி, நாயன்மார்கட்டைச் சேர்ந்த வீரசிங்கம் வினோதன் (வயது 19) என்பவரே கடந்த 8ஆம் திகதி படையினரால் கைதுசெய்யப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர் தமது வீட்டில் உள்ள நகைத் தொழிலகத்தில் இருந்தவேளை, படையினரால் கைதுசெய்யப்பட்டதாக அவரது தந்தையார் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (அ-50)

# குடாநாடு முழுவதும் நாளை பகல் 5 மணிநேரம் மின்வெட்டு

யாழ்ப்பாணம், ஓக.10

குடாநாடு முழுவதும் நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை மின் தடை நடைமுறைப்படுத்தப்படும் என்று மின்சாரசபையின் பிராந்திய அலுவலகம் அறிவித்துள்ளது.

அவசர திருத்த வேலைகள் காரணமாகவே இந்த மின்தடை நடைமுறைப்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை -

தற்சமயம் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் மின்வெட்டை குறைக்கும் ஏற்பாடுகளில் ஒன்றாக கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்டுள்ள மின் பிறப்பாக்கிகளை பரீட்சார்த்தமாக இயக்கிப் பார்க்க வசதியாகவே நாளை பகல் நேர மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

மின் பிறப்பாக்கிகள் மூலம் கூடுதலான மின்சாரத்தைப் பெறக்கூடிய நிலை உருவானால் இரவில் மின்வெட்டு நேரம் குறைக்கப்படும் என்று மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ-1-203)

# நல்லூர் ஆலயச் சூழலில் பந்தல்கள் அமைக்கும் பணி நேற்று ஆரம்பம்

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தையொட்டி ஆலய முன்பாக பருத்தித்துறை வீதியில் வழமைபோன்று கொட்டகைகள் அமைக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் இந்த இரு பந்தல்களையும் அமைப்பதற்கான வேலைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வழமைபோன்று பெரிய பந்தல்களை அமைக்க ஆலய நிர்வாகம் சம்மதித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பந்தல்கள் இம்முறை அமைக்கப்படமாட்டாதென யாழ்.மாநகரசபையில் நடந்த உற்சவகால கூட்டத்தில் பந்தல் அமைப்பவர்கள் தெரிவித்திருந்தனர். எனினும் தற்போது நிலைமை சுமுகமாக இருப்பதாகக் கருதுவதால் பந்தல்களை அமைக்க முடிவு செய்யப்பட்டதாக நல்லூர் ஸ்ரீ முருகன் தண்ணீர் பந்தல் பொறுப்பாளர்கள் தெரிவித்தனர். (1-111)

# வடமராட்சியில் பல இடங்களில் படையினர் நேற்றுச் சுற்றிவளைப்பு

உடுப்பிட்டி, ஓக.10

வடமராட்சியில் பல இடங்கள் படையினரால் நேற்று சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

பொலிகண்டி தெற்கு, சமரபாகு ஆகிய பகுதிகள் அதிகாலை 5 மணிக்கு சுற்றிவளைக்கப்பட்டன. நண்பகல் 2 மணிவரை அந்தப் பகுதியில் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

பொலிகண்டி வீரபத்திரர் ஆலயத்துக்கு முன்பாக கூடுமாறு படையினர் மக்களைப் பணித்தனர். அங்கு கூடியவர்கள் துருவித்துருவி விசாரணை செய்யப்பட்டனர். மூன்று இளைஞர்களின் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொண்ட படையினர் முகாமில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

கரணவாய் தெற்குப் பகுதியும் நேற்று அதிகாலை 5.30 மணிக்கு சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

அனைவரையும் கரணவாய் மகா வித்தியாலயத்தில் கூடுமாறு கேட்டுக்கொண்ட படையினர் அங்குவைத்து சகலரையும் விசாரணை செய்தனர். சிலரை முகாமுக்கு வருமாறு படையினர் கூறிச் சென்றனர். கவச வாகனங்களில் வந்த படையினரே இந்தப் பகுதிகளைச் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர். (அ-1-155)

## உசன் பரீட்சைநிலையம் கொடிகாமத்திற்கு மாற்றம்

எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவுள்ள ஐந்தாம்தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்கு தென்மராட்சி கல்வி வலயத்தில் உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட பரீட்சை நிலையம் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத் திற்கு மாற்றப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (1-207)

## நாளை

| | |
|---|---|
| ஆடி - 26 | சனிக்கிழமை 11.08.2007 |
| திதி : திரயோதசி | காலை : 06.20 |
| நட்சத்திரம் : | புனர்பூசம் |
| | பி.பகல் : 12.56 |
| | 03.04 - 04.34 |

## நாவாந்துறையில் இன்று போசாக்கு மா விநியோகம்

யாழ்ப்பாணம், ஓக.10

நாவாந்துறைப் பகுதியில் நலிவுற்றவர்களுக்கு இன்று வெள்ளிக்கிழமை மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் போசாக்கு மா வழங்கப்படும்.

போசாக்கு குறைந்த குழந்தைகள் மற்றும் நலிவுற்றவர்களின் நலன்கருதி மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் சத்தான மா தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த மாவே இன்று வழங்கப்படுகின்றது என நிலையப் பணிப்பாளர் தெரிவித்தார். (1-202)

## சங்கானையில் நடமாடும் சேவை; செவ்வாயன்று இடம்பெறும்

யாழ்ப்பாணம், ஓக.10

சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட காலங்கடந்த இறப்பு, பிறப்பு மற்றும் விவாகப் பதிவுகளுக்கான நடமாடும் சேவை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

இந்தச் சேவை அன்றைய தினம் காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை சங்கானை பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறும் என பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (1-203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோதக் குழுக்களுக்கு ஆயுதங்களை வழங்கி தமிழர்களைக் கொல்கின்றது அரசு!

## நாடாளுமன்றில் மகேஸ்வரன் எம்.பி. காட்டம்



''இந்த அரசு வடக்கு - கிழக்கில் உள்ள தமிழர்கள் மீதும் யுத்தம் புரிய வேண்டும் என்றால் அவர்கள் அனைவருக்கும் ஆயுதங்களை வழங்கி விட்டு யுத்தம் செய்ய வேண்டும். ஆனால் அரசு தமிழர் விரோதக் குழுக்களுக்கு ஆயுதங்களை வழங்கியிருப்பதால் தமிழர்கள் தினமும் கொல்லப்படுகின்றனர்'' - இவ்வாறு ஐ.தே.கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

அவசர காலச்சட்ட நீடிப்புத் தொடர்பாக பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கடந்த காலங்களில் தமிழ் மக்கள் வடக்கு - கிழக்கு - மலையகம் என்ற பேதமில்லாமல் எங்கும் கடத்தப்பட்டனர். யாழ்ப்பாணத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் கடத்தப்பட்டுள்ளனர்.

பிரதமர் அரச படையினரை காப்பாற்றும் விவாதத்தில் சபையில் உரையாற்றுகின்றார். இந்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் இன்று வரை யாழ்ப்பாணத்தில் பலர் கொல்லப்பட்டுவிட்டனர்.

**மோசடி வழக்கு விசாரணைக்கு வர இருந்த வேளை எனது ஆதரவாளர் யாழ்ப்பாணத்தில் சுடப்பட்டார்**

எனது உறவினரும் எனது கட்சியின் ஆதரவாளருமான தர்மலிங்கம் சண்முகராஜாவும் இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இவர் கொல்லப்படுவதற்கு சில நாள்களுக்குப் பின்னர்தான், 2001ஆம் ஆண்டு தேர்தலின்போது இடம்பெற்ற மோசடி தொடர்பாக அவர் தாக்கல் செய்திருந்த வழக்கு ஒன்று விசாரணைக்கு எடுக்கப்படவிருந்தது.

வழக்கின் விசாரணைக்காக முறைப்பாட்டாளர் நீதிமன்றில் ஆஜராகாமல் தடுப்பதற்காகவே இவரை அரசின் உதவியுடன் ஈ.பி.டி.பியினர் சுட்டுக்கொன்றனர்.

டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்தில் இருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில் வைத்துதான் இவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

தமிழர்கள் தினமும் கடத்தப்படுகின்றனர். ஆனால் அப்படிக் கடத்தப்பட்டவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றிருப்பார்கள் என்று அரசு பொறுப்பில்லாமல் கூறுகின்றது.

இந்த அரசு முறைப்படி 2010ஆம் ஆண்டு வீட்டுக்குப் போய்விடும். ஆனால், அரசின் மோசமான செயற்பாட்டால் இந்த வருட இறுதியிலேயே அரசின் கதை முடிந்துவிடும்.

**தமிழருக்கும் ஆயுதம் வழங்குங்கள்**

நீங்கள் யுத்தம் செய்வதாகவிருந்தால் தமிழ் மக்களுக்கு ஆயுதங்களை வழங்கி விட்டு யுத்தம் செய்யுங்கள். ஆனால், நீங்கள் சட்ட விரோத குழுக்களுக்கு ஆயுதங் களை வழங்கிவிட்டே யுத்தம் செய்கின்றீர்கள்.

தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் நட்பாக வாழ்கின்றார்கள். ஆனால், சிங்கள அரசியல்வாதிகள் படையினரை வைத்து அப்பாவித் தமிழ் மக்களைக் கொலை செய்கின்றனர்.

தமிழ் மக்கள் இன்று சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். ஆனால் 19 மாதங்களாக நாட்டை ஆட்சி செய்யும் ஜனாதிபதி அதுவரை ஒருதடவையாவது தமிழ் மக்களை அலரி மாளிகைக்கு அழைத்து அவர்களது துன்பங்களைப்பற்றி விசாரிக்கவில்லை.

இனியாவது தமிழ் மக்களைக் கொல்வதை - கடத்துவதை - தவிர்க்கவும் கப்பம் கோருவதை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும். இந்த நாட்டின் நலன் கருதி இந்த உயர்ந்த சபையில் நான் இந்த வேண்டுகோளை விடுக்கின்றேன் - என்றார். (சி)

## கருணா ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிக்கு மிக மோசமான இடம் இதுதான். கடந்த 18 மாதங்களில் முப்பதுக்கும் மேற்பட்ட தொண்டுப் பணியாளர்கள் இங்கு கொல்லப்பட்டிருக்கின்றார்கள்.

அடுத்து மனிதாபிமானப் புணியாளர் கள் எல்லா இடங்களுக்கும் சென்று தமது பணிகளை ஆற்ற அனுமதிக்கப்பட வேண்டும்.

**ஜனாதிபதியின் கவனத்திற்கு**

இவை தொடர்பாக அரசு எங்களுக்கும் சில வாக்குறுதிகளை வழங்கியிருக்கிறது.

தொண்டுப் பணியாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுமென்றும் கூறப்பட்டி ருக்கின்றது. எல்லா இடங்களுக்கும் தொண் டுப் பணியாளர்கள் செல்ல அனுமதிக்கப்படுவர் என்றும் எமக்குத் தெரிவிக்கப்பட் டது.

இது தொடர்பாக எந்தெந்த முகவர் அமைப்புகள், எங்கெங்கு பணியாற்ற வேண்டும் என்ற விவரமும் எம்மிடம் கோரப்பட்டுள்ளது.

சில இடங்களில் மிதிவெடி, கண்ணிவெடி அகற்றும் பணி முடிவடையும் வரை அங்கு செல்லமுடியாமல் இருந்தாலும், ஏனைய இடங்களுக்கும் தொண்டுப் பணியாளர்கள் சுமுகமாகச் சென்றுவர அனுமதிக்கப்படுவர் என்றும் கூறப்பட்டது. இவை தொடர்பாக அரசுத்தரப்பில் வழங்கப்பட்ட உறுதி மொழிகள் எவ்வாறு நடைமுறையில் செல்லுபடியாகின்றன என்பதையும் நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண் டும்.

இந்த விடயங்கள் குறித்தெல்லாம் இலங்கை ஜனாதிபதியின் கவனத்துக்கும் நான் கொண்டுவந்துள்ளேன்.

அவரும் சில உறுதி மொழிகளை வழங்கியுள்ளார். ஜனநாயக வழியில் தேர்வான ஓர் அரசு ஏனையோரிலும் பார்க்க உயர்ந்த தரத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். அதன் அடிப்படையிலேயே அது எடை போடப்படும். தனக்கு எதிராகச் சுமத்தப் படும் குற்றச்சாட்டுகள் குறித்து அது கவனித்து, விசாரிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**வடக்கு கிழக்கில் அச்சத்துடன் வாழும் மக்கள்**

வடக்கிலும், கிழக்கிலும் நான் நேரில் சென்று பார்த்தேன். அந்த மக்களின் அச்ச வாழ்வை என்னால் உணர முடிகின்றது.

அங்கு - குறிப்பாக கிழக்கில் - இயங் கும் கருணாகுழுவின் ஆயுதம் களையப் படுவது சுமுக நிலையை ஏற்படுத்த அவ சியம் என்பதை நான் ஏற்றுக்கொள்கின் றேன்.

அக் குழு அரசின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் ஆயுதங்களுடன் நடமாடுவதால் தான் அதன் ஆயுதக்களைவு பற்றி நாம் பேசுகின்றோம். அது அரசுக்குரிய கடமையாகும்.

மனித உரிமைகள் அவதானிப்பு மையம் தற்போது வெளியிட்டுள்ள அறிக்கை குறித்து இலங்கை அரசு தீவிர கவனம் எடுக்க வேண்டும். அந்த அமைப்பு அற்பமான ஒன்றல்ல. அது அற்பமான குற்றச்சாட்டுக்களுடன் அறிக்கை வெளியிடாது. ஆகவே, அந்த அறிக்கை குறித்து இலங்கை அரசு தீவிர கவனம் எடுப்பது முக்கியம் - என்றார் அவர். (உ)

## இப்போதைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிவில் நிர்வாக முறைமை ஏற்பட்டால்தான் கருணாகுழுவின் பாதுகாப்பை மாற்றுமுறையில் ஏற்படுத்தமுடியும். அதுவரை புலிகளின் உயிர் அச்சுறுத்தலில் இருந்து கருணா குழுவினர் தம்மைப் பாதுகாப்பதற்காக அவர்கள் ஆயுதங்களை வைத்திருப்பது அவசியம். அதற்கு நாம் அனுமதிக்கத்தான் வேண்டும் - என்றார் பிரதி அமைச்சர் யாப்பா.

## காணாமற்போய்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுப் பதிவு இலக்கங்கள் இருக்கின்றன.

நீங்கள் கூறுவது போல் 90 வீதமானோர் திரும்பியிருந்தால் அவர்களின் விவரங்களைக் கூறுங்கள். காணாமற்போனவர்களின் குடும்பத்தவர்களாவது சந்தோஷப்படுவார்கள்.

பொய்யான தகவல்களை வெளியிட்டு யாரைத் திருப்திப்படுத்த முனைகின்றீர்கள்?

இந்த நாட்டின் அரச நிர்வாகம் மட்டுமே உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த நாட்டையே உங்களுக்கு எழுதிக்கொடுக்கவில்லை.

ஆனால், எங்களுடைய மக்கள் தொடர்பாக கேள்வியெழுப்பும் உரிமை எங்களுக்கு உண்டு. உள்நாட்டிலும் கேட்போம். வெளிநாட்டிலும் குரல் எழுப்புவோம். அதைத் தடுக்கும் உரிமை எவருக்கும் கிடையாது.

தகவல்துறை அமைச்சர் எப்போதுமே நேரடியான பதிலைக் கூறுவது இல்லை. நழுவிப்போகவே முயற்சிக்கிறார்.

நீங்கள் கூறுவதுபோல், காணாமற்போனவர்களில் 90 சதவீதமானோர் வீடு திரும்பியிருந்தால், அவர்களின் பெயர்ப்பட்டியலைப் பகிரங்கமாக வெளியிடும்படி கேட்டுக்கொள்கின்றேன். - என்று கூறினார் மனோ கணேசன். (சி)

## சுடர் ஒளி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றுக்கொள்ள முடியாதது.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டி ருக்கும் - ஜனாதிபதியுடனான - பத்திரிகை ஆசிரியர்களின் அந்தச் சந்திப்பில் நானும் கலந்துகொண்டேன். ஆனால் 'சுடர் ஒளி' ஆசிரியரை அங்கு ஜனாதிபதி அப்படிப் பேசவேயில்லை.

பத்திரிகையாளர்கள், ஊடகவியலாளர் கள் தமக்கு விரும்பியபடி கேள்வி கேட்கலாம். எழுதலாம். ஆனால் அபாண்டமாக இப்படி நடக்காத ஒரு விடயத்தைக் கூற முடியாது. இதை தேசிய ரீதியில் குழப்பத்தை ஏற்படுத்தும் விடயமாகவே கருதவேண்டும்.

'சுடர் ஒளி' ஆசிரியர் தமது பக்கத்துக்கு 'தினமுரசு' ஆசிரியரை சாட்சிக்கு குறிப்பிடுகிறார். நான் 'தினமுரசு' ஆசிரியருடன் இது குறித்து சற்று முன்னர் பேசினேன். அவர் அப்படி நடக்கவேயில்லை என்பதை உறுதிப்படுத்தினார்.

- இப்படி ஊடக அமைச்சர் மேலும் கூறினார்.

**சுடர் ஒளி ஆசிரியரின் குறிப்பு**

1.சர்ச்சைக்குரிய இந்தச் சம்பவம் எங்கு, எப்போது இடம்பெற்றது என்பது ஏற்கனவே ஊடகத்துறைப் பணிப்பாளரின் செய்திக்கான ஆசிரிய குறிப்பில் விளக்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்தில் ஊடக அமைச்சர் இருக்கவில்லை.

2. எந்தச் சந்தர்ப்பத்திலும் இவ்விடயத்துக்கு சாட்சியாக 'தினமுரசு' ஆசிரியரை நாம் அழைக்கவில்லை. ஆதாரமாக 'தினமுரசு' செய்தியையே குறிப்பிட்டோம். விரைவில் அச் செய்தியுடன் விவரங்கள் வெளிவரும். (ஆ -ா்)

## உயிலங்குளம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு உத்தரவாதம் வழங்க முன்வராத தாலும் மடு வீதி ஊடான பாதையை போக்கு வரத்துக்கு திறக்க முடியாத நிலை தோன்றி யுள்ளது.

எனவே, உயிலங்குளம் ஊடான பாதையே போக்குவரத்துக்குத் திறக்கப்படும். இத னால் ஏற்படும் அசௌகரியங்களை பக்தர் கள் பொறுத்துக்கொள்ள வேண்டும் - என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை - மடு வீதியைத் திறப் பதற்கு விடுதலைப் புலிகளும் படையினரும் எழுத்து மூலமான இணக்கத்தை மன் னார் ஆயர் அதிவண இராயப்பு ஜோசப் பிடம் வழங்கியிருந்தனர். அதனை அடுத்து இப் பாதையைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டன.

அந்த வீதியில் 800 மீற்றர் நீளமான பாதை சூனியப் பிரதேசமாக இருக்கின்றது. இதில் 400 மீற்றர் படையினரின் கட் டுப்பாட்டிலும் 400 மீற்றர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலும் உள்ளது.

இந்தப் பகுதியில் கண்ணிகளை அகற்றப் படைத் தரப்பு நிபந்தனை விதித்திருந்தது. கண்ணிகள் அகற்றப் படும் போது செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அப்பகுதியில் பிரசன்னமாக இருக்க வேண்டும் என்பதே அந்த நிபந்தனையாகும்.

இது குறித்துப் போதிய கால அவகாசத்துடன் தமக்கு அறிவுறுத்தல் கிடைக்காத தால் தாம் அங்கு பிரசன்னமாக இருக்க முடி யாது என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தெரிவித்தது.

இதனால் அந்த பாதையைத் திறக்கும் முயற்சி கைகூடவில்லை என்று விடுத லைப் புலிகள் தரப்பு தெரிவித்துள்ளது. (அ-1)

அறிவொளி NALLUR
Bio அல்போன்ஸ்
Micro Biology
Sat, Sun 2.30
Func Animal
Sat, Sun 3.30
Bio Diversity
Sat, Sun 4.30
சிங்காரம்
M.செல்வன்
Sat, Sun 2.30

MY COMPUTER தமிழ் கணனி மாத இதழ்
4591871

## ஒன்றில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலையில் அரச படையினர் தமிழ் இளைஞர்களை திருமணம் முடிக்குமாறும் அல்லது நாட்டை விட்டு ஓடிவிடுமாறும் கட்டளையிடுகின்றனர். திருகோணமலையில் அதிக கெடுபிடிகள் தமிழர்கள் மீது மேற் கொள்ளப்படுகின்றன.

மீள்குடியேற்றம் என்ற பெயரில் திருமலை மக்கள் கொடு மைப் படுத்தப்பட்டுள்ளனர். சம்பூரில் இருந்து மட்டக்களப்புக்கு இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்துகிறோம் என்று கூறி, அவர் களை பஸ்களில் ஏற்றி சம்பூருக்குக் கொண்டுசெல்லாமல் கிளிவெட்டி போன்ற வேறு இடங்களில் பலவந்தமாகக் குடியமர்த்தியுள்ளனர் - என்றார்.

## மரண அறிவித்தல்கள்



### சுப்பிரமணியம் சிவஞானரத்தினம்

(முன்னாள் பெருந்தெருக்கள் மேற்பார்வையாளர்)

அராலி தெற்கைச்சேர்ந்த சுப்பிரமணியம் சிவஞானரத்தினம் (முன்னாள் பெருந்தெருக்கள் மேற்பார்வையாளர்) 07.08.2007 அன்று சிவபதம் அடைந்து விட்டார்.


அன்னார் ஓய்வுபெற்ற அதிபரும், அராலி ஆகாயக்குளம் விநாயகர் தேவஸ்தானம், அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம் ஆகியவற்றின் தர்மகர்த்தாவுமான காலஞ்சென்ற சுப்பிரமணியம் - முத்துநாயகி தம்பதியரின் மூத்த புதல் வனும் ஓய்வுபெற்ற அராலிசரஸ்வதி மகாவித்தியாலய ஆசிரியர் தையல் நாயகியின் அன்புக் கணவரும் மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியர் சிவகாந்தனின் பாசமிகு தந்தையும் ஓய்வுபெற்ற தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் செந்தில்நாதன், புனிதவதியார் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஞானசௌந்தரியின் மைத்துனரும் கஜநேசன் (லண் டன்), மயூரேசன், யதுர்சன் ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (10.08.2007) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலிதெற்கு பூணாவடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குறிப்பு: நேற்று (09.08.2007) வியாழக்கிழமை நடைபெறவிருந்த அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2007) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
சிவகாந்தன் (மகன்), செந்தில்நாதன் (சகோதரன்).



### செல்லப்பா ஆறுமுகம்

(ஓய்வுபெற்ற வைத்திய ஆய்வுகூட தொழிநுட்பவியலர் - காரைநகர்)

காரைநகர், தங்கோடையைப் பிறப்பிடமாகவும் இடைப்பிட்டியை வசிப்பிடமாகவும் தற்போது 124, நாவலர் வீதி, (மனோகராச் சந்தி) யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா ஆறுமுகம் நேற்று (09.08.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - வள்ளியம்மை தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற சிவகலையின் அன்புக் கணவரும் சிவசோதி (கால்நடை வைத்திய அதிகாரி - VRI.பேராதனை), சிவகுமாரன் (New Veruwela Chemist - Grandpass) சிவகௌரி, சிவசித் (பொறியியலாளர், சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் புஸ்பதேவி (கொ/ விவேகானந்தாக் கல்லூரி), திருவருள் (யா/ மத்திய கல்லூரி), சிவலிங்கம் (குகன் எரிபொருள் நிலையம், திருநெல்வேலி), சுலோசனா (QS சிங்கப்பூர்) ஆகியோரின் பாசமிகு மாமனும் நவகரன், கோகுலன், ஜனகன், இளமாறன், மதிவதனா, ரவிசங்கர், சங்கீதா, சுமங்கலி, ராம்குமார், சிவசங்கரி, ஆகாஷ், அபிலாஷ் ஆகியோரின் ஆசைப் பேரனும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை (செல்லப்பா ஸ்ரோர்ஸ்), கனகசபை (கணேசன் ஸ்ரோர்ஸ்), கந்தையா மற்றும் மாணிக்கவாசகர் (இளைப்பாறிய உத்தியோகத்தர், பொலிஸ் திணைக்களம்), சௌந்தராம்பிகை, கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற நாகேஸ்வரி, கமலாதேவி, நேசமலர், புவனேஸ்வரி, வைத்திலிங்கம், சுந்தரமூர்த்தி, சோமசுந்தரம், சிவப்பிரகாசம், செல்வராணி மற்றும் மகேஸ்வரன் (இளைப்பாறிய தபால் அத்தியட்சகர்), சிவகாமசுந்தரி, சிவமணி, பாலசிங்கம் (இளைப்பாறிய உதவி அரசஅதிபர்), சிவபாக்கியம் ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.08.2007) சனிக்கிழமை முற்பகல் 9 மணியளவில் 124, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

124, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.08.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org